வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 13.12.2023 புதன்கிழமை | இதழ் : 345 | பக்கங்கள் : 12

# யாழ்ப்பாண தீவுகளில் இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம்

## அனுமதி அளித்தது அமைச்சரவை

கொழும்பு, டிசெம்பர் 13

யாழ்ப்பாணத்திலுள்ள சிறிய தீவுகளில் இரட்டை ரக புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் உள்ள மக்களுக்கு மின்சார வசதியினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 11 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி, குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இந்திய ஒப்பந்தக்காரர்களிடம் விலைமனு கோரப்பட்டுள்ளது.

அதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் கீழ் குறித்த ஒப்பந்தத்தை யு சோலர் கிளீன் எனர்ஜி சொலு

11

# பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்கு முழு உதவி

## ஜீவனிடம் அமெரிக்க பிரதிநிதி உறுதி

கொழும்பு, டிசெ. 13

மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் அவர்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்காகவும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று அமெரிக்காவின் விசேட பிரதிநிதி உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க

11

# உலக தமிழர் பேரவையை நாங்கள் வரவேற்கிறோம்!

## அபிவிருத்தியிலும் பங்களிக்க வேண்டும் என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 13

உலக தமிழர் பேரவையின் வருகை போலி தேசியம் பேசுகின்ற சில குழுக்களுக்கு தடையாக இருக்கலாம். ஆனால், எம்மைப் பொறுத்தவரை புலம்பெயர் அமைப்புகள் யாரும் இங்கு வரலாம். அவர்களை வரவேற்க நாம் தயாராகவே இருக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளரும் கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறீ

11

# சிங்கப்பூர் பிரதமர் இலங்கை வருகிறார்



கொழும்பு, டிசெ. 13

சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லொங்க் விரைவில் இலங்கை வரவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கி

11

# கிளிநொச்சியில் சூரிய மின்சக்தி ஒப்பந்தங்கள் அரசால் மூடிமறைப்பு

## அநுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 13

கிளிநொச்சி பூநகரி குளத்தில் சூரிய மின்சக்தி உற்பத்தியை மேற்கொள்ளவது குறித்து முழுமையான விளக்கத்தினை மக்களுக்கு வழங்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

# பட்ஜெட் இறுதி வாக்கெடுப்பு இன்று!

கொழும்பு, டிசெ. 13

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நவம்பர் 13ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

நவம்பர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 21 ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது.

2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு

11

# "ஆணுறைக்கு வற் விதிப்பது நல்லது"

கொழும்பு, டிசெ. 13

ஆணுறைகளுக்கு பெறுமதி சேர் வரி விதிப்பது நல்ல விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற

11

# யாழில் விக்கிரகங்களின் கீழிருந்த தகடு மற்றும் பொற்காசுகள் திருட்டு

## பூசகர் ஒருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணத்தில் ஆலய விக்கிரகங்களின் கீழ் இருந்த தகடு மற்றும் பொற்காசு என்பவற்றை திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையில் உள்ள இரண்டு ஆலய விக்கிரகங்களை பெயர்த்தெடுத்து அவற்றின் கீழ் இருந்த தங்கத்தகடு மற்றும் பொற்காசு என்பற்றை சந்தேகநபர் திருடியுள்ளதாக

11

# இலங்கை-இந்திய மீனவர் பிரச்னையை இராஜதந்திர ரீதியில் அணுகவேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைக்கான திருத்தப்பட்ட புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கான வரைவு தற்போது துறைசார் நிபுணர்களின் கருத்துகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மீன்பிடிப் படகுகளில் பற்றரி மோட்டர் போன்ற எரிபொருள் மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்தப்படுவதால் மீனவர்களின் உற்பத்திச் செலவு குறைவதோடு, அதன் மூலம் எரிபொருள் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

11

# பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சி மாற சட்டபூர்வ தகுதியில்லை

## சட்டத்தரணி சுமந்திரன் உயர் நீதிமன்றில் வாதம்

கொழும்பு, டிசெ. 13

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சி மாறுவதற்கான சட்டப்பூர்வ தகுதி இல்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் பாராளுமன்ற முறைமையை பேணுவதில் சவால் விடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் தமது கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணையின் போதே ஜனாதிபதி சட்டத்தரணி

11

# இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு மூத்த ஊடகவியலாளர். அவரைப்பற்றி பல தடவைகள் இந்தப் பத்தியிலும் எழுதியிருக்கிறேன். கனடாவிலிருந்து அதிகாலை தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

எப்போதும் தமிழரசின் பெருந்தலைவர் சம்பந்தனின் தலைமையை கடுமையாக விமர்சிப்பவர் அவர். ஆனால், சம்பந்தனின் கடைசி அறிக்கையை படித்த பின்னரே என்னோடு தொடர்புகொண்டார்.

எடுத்த எடுப்பில் சொன்னார், ‘சம்பந்தன் மீது எனக்கு கடும் கோபம் இருந்து வந்தது உமக்குத் தெரியும். ஆனால் இப்போது அவர் மீது எனக்கு பரிதாபம்தான் ஏற்படுகின்றது’ என்றார்.

எனக்கும் அத்தகைய மனநிலைதான் என்று அவரிடம் விளக்கமளிக்க வேண்டியிருக்கவில்லை.

சம்பந்தன் தன்னோடு இருந்தவர்களை- அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர்களை கடந்த பல ஆண்டுகளாக கண்டுகொள்ளவே இல்லை.

வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக களம் இறங்க மாவை சேனாதிராஜா விரும்பிய போதிலும் அதனை மூர்க்கத்தனமாக எதிர்த்தவர் சந்பந்தன். மாவை வேட்பாளராக வேண்டும் என்று பங்காளிக் கட்சிகள் எல்லாம் விரும்பியபோதிலும் அந்தப் பதவிக்கு தெரிவாகின்றவர் சர்வதேச பிரதிநிதிகளுடன் ஊடாடவேண்டியிருக்கும் என்றும் அதற்கு மாவை பொருத்தமானவர் அல்ல எனவும் அவரின் மொழி அறிவை காரணம் காட்டி எதிர்த்ததுடன் நீதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், ‘தானும் தன் ஆன்மீக குருவும்’ என்று வாழ்ந்துகொண்டிருந்த சி. வி. விக்னேஸ்வரனை கொண்டுவந்து முடிசூட்டி மகிழ்ந்தார்.

ஆனால், அவர் பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே சம்பந்தன் தனது தவறைப் புரிந்துகொண்டாரோ தெரியவில்லை.

அதேபோலத்தான், தன்னோடு பல வருடங்களாக பாராளுமன்றத்தில் கூடவே இருந்த சகாக்களை கண்டுகொள்ளாமல், தான் அரசியலுக்கு கொண்டு வந்த சுமந்திரனையே தனது பக்கத்தில் எப்போதும் வைத்துக்கொண்டார்.

ஆனால், அவரும் மார்பில் உதைத்ததுபோல அண்மையில் சம்பந்தனுக்கு ‘வயதுபோய் விட்டது. அவர் இனி பதவியை விட்டுவிலகி ஓய்வுபெறவேண்டும்’ என்றபோது அவர் இரண்டாவது தடவை சறுக்கி விழவேண்டி வந்தது.

தனக்கு துரோகம் செய்தவனை பழிவாங்க வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் இயல்புதான். அதிலும் அரசியல்வாதிகளுக்கு அது சற்று அதிகமாகவே இருக்கும் என்ற நம்பிக்கை ஒன்று நம் மத்தியில் இருக்கின்றது.

ஆனாலும், அப்படி எந்தவித எதிர்வினையும் இன்றி சம்பந்தன் ஐயா கடந்த சில நாட்களாக காலம் கடத்தியபோது, அவர் முற்றிலுமாக செயலிழந்து போய்விட்டாரோ என்று எண்ணியவர்களில் இந்த ‘ஊர்க்குருவி’யும் ஒருவர்.

ஆனால், அப்படியல்ல, அவர் பொருத்தமான நேரம் பார்த்து காத்திருந்திருக்கிறார் என்று இப்போது எண்ணவேண்டியிருக்கின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இருபதாம் திகதி தமிழரசின் தேசிய மாநாடு நடக்கவிருக்கின்றது. அதில் புதிய தலைவர் தெரிந்தெடுக்கப்படவிருக்கிறார். தலைவர் பதவிக்கு இதுவரை மூவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் போட்டி என்னவோ இருவருக்கு இடையிலேதான்.

தலைவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள சுமந்திரன், சிறீதரன் ஆகியோருக்கு இடையே கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்பட்ட அதேவேளையில்தான் கிழக்கிலிருந்து முன்னாள் எம். பி. யோகேஸ்வரனின் பெயரும் இப்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் இல்லாமல் தெரிவு நடைபெறவேண்டுமானால் இருவர் போட்டியிலிருந்து விலகவேண்டும். சிறீதரனோ, சுமந்திரனோ விலகப்போவதில்லை. அவர்களில் ஒருவர் விலக சம்மதித்தால் யோகேஸ்வரனும் சம்மதிக்கலாம். ஆனால், அப்படி ஓர் அதிசயம் நடக்காது என்றே சுமந்திரன், சிறீதரன் ஆகியோருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் இருவரையும் விலகி யோகேஸ்வரனுக்கு வழிவிடுமாறு கோரிக்கை முன்வைக்கப்படலாம். அதற்காகவே யோகேஸ்வரனின் பெயரும் பிரேரிக்கப்பட்டிருக்கலாம். அப்படியொரு நிலைமை வருகின்றபோது புதிய தலைவர் ஒருவர் கிழக்கிலிருந்து தெரிவாக சந்தர்ப்பம் ஏற்படலாம்.

ஆனால், அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது, இதுவரை பொறுமையாக இருந்த சம்பந்தன் ஐயா, திருகோணமலையில் பொதுச் சபைக்கு ஆட்களைத் தெரிவுசெய்கின்றபோது தமது ஆதரவாளர்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர் என்று இப்போது புகார் தெரிவித்திருக்கிறார். இனி என்ன கட்சியின் ஒழுக்காற்றுகுழு அதனை விசாரித்து, தீர்ப்பு சொல்லவேண்டும். சம்பந்தனின் புகார் நியாயமானது என்றால் இனி திருகோணமலை மாவட்டக்குழு கூடி புதியவர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும்.

இதற்கு காலம் அவகாசம் கொடுக்கவில்லை என்றால் தற்போதைய தலைவரே தொடர்ந்து பதவியில் இருக்கவும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

சம்பந்தன் ஐயா ஏதோ நினைத்திருக்கிறார் என்பது மாத்திரம் புரிகின்றது. பொறுத்திருந்து பார்த்தால் தெரியவரும்தானே.!

**- ஊர்க்குருவி.**

# ரவி செனவிரத்னவின் மனுவில் ஆட்சேபனைகளுக்கு அவகாசம்

கொழும்பு, டிசெ. 13

பிணையில் செல்லக்கூடிய போக்குவரத்துக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தம்மை அநியாயமாக விளக்கமறியலில் வைத்ததன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்பளிக்கக் கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில், மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய பொலிஸ் மா அதிபர் உட்பட பிரதிவாதிகளுக்கு உயர் நீதிமன்றம் நேற்று கால அவகாசம் வழங்கியது.

விஜித் மலல்கொட, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரவி வைத்தியலங்கார, நீதிமன்றில் ஆஜராகி, இந்த மனுவின் உண்மைகளை சரிபார்க்க திகதியை கோரினார்.

அப்போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்த மனு தொடர்பான வரையறுக்கப்பட்ட ஆட்சேபனைகளை முன்வைக்க பிரதிவாதிகளுக்கு அனுமதி வழங்குமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மூன்று நீதிபதிகள் குழு, மனுவை அடுத்த ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டது.

கொழும்பு - பம்பலப்பிட்டி வீதியில் குடிபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் தன்னைக் கைது செய்த பொலிஸார் எவ்வித நியாயமான காரணமும் இன்றி விளக்கமறியலில் வைத்ததாக மனுதாரர் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிர் சேதம் மற்றும் அரசு சொத்துகளுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்று சுட்டிக்காட்டிய மனுதாரர், பிணையில் வெளிவரக்கூடிய குற்றத்திற்காக தன்னை நியாயமற்ற முறையில் காவலில் எடுத்ததாக மனுதாரர் குற்றம் சாட்டினார்.

தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும், அதற்கு தகுந்த இழப்பீடு வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோரி மனுதாரர் இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். (அ)

# இந்திய அரசின் உதவியுடன் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

## அமைக்க நடவடிக்கை என்கிறார் ரணில்

கொழும்பு, டிசெ. 13

இந்தியாவின் உதவியுடன் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். 2035க்கு பின்னர் வரும் தொழில்நுட்பம், எமது நாட்டை தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றமடைந்த நாடாக அறிமுகமாக்கும் நிலை ஏற்படும் என தொழில்நுட்ப அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு -செலவு திட்டத்தில் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அடிப்படை இல்லாமல் எமக்கு முன்னேறிச் செல்ல முடியாது. நாட்டை முன்னேற்ற முடியாது. அதேபோன்று விவசாயம் மற்றும் நவீனப்படுத்தல் தொடர்பில் பேசுவதன் மூலம் கிடைக்கும் பயன்பாடுகளை எவ்வாறு அதிகரித்துக்கொள்வது என்பதே அதன் நோக்கமாகும். அதற்காக நாங்கள் நவீன தொழில்நுட்ப விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

எங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பே இருக்கிறது. அதன் மூலம் நாங்கள் முடியுமான பிரயோசனம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக இருக்கும் ஒரே தீர்வு தொழில்நுட்ப விவசாயத்துக்கு இணைப்பதாகும். அதனால் நாங்கள் வேளாண் தொழில்நுட்ப முறை தொடர்பில் நாங்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை நிறுவ இருக்கிறோம். இலங்கையில் விவசாயத்தை நவீனமயமாக்க தனியார் துறைக்கு அழைப்பு விடுத்திருக்கிறோம்.

அதேபோன்று வலுசக்தி தொடர்பில் தெரிவிப்பதாக இருந்தால், நாங்கள் பல கிகாவோட்களை காற்றாலை மின்சாரத்தின் மூலம் பெற்றுள்ளோம். அதேபோன்று 200 ஜிகாவோட் சூரிய சக்தி மின்சாரம் மூலம் பெற்றுக்கொள்வோம். நாங்கள் இந்தியாவிடமிருந்து உதவி பெற்றுக்கொண்ட முறையும் இருக்கிறது. கிரீன் ஹைடிஜன் மற்றும் அமோனியா முறையாகும். இதில் ஹைடிஜன் முறையை கடல்சார் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகிறோம். இது போன்ற துறைகளில் வித்தியாசம் இருக்கிறது.

ஜேர்மன் மற்றும் பிரான்ஸுடன் நாங்கள் கிரீன் தொழில்நுட்பம் தொடர்பாக கலந்துரையாடி இருக்கிறோம். மேலும் 4, 5 வருடங்கள் செல்லும்போது அதாவது 2035க்கு பின்னர் வரும் தொழில்நுட்பம் எமது நாட்டை தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றமடைந்த நாடாக அறிமுகமாகும் நிலை ஏற்படும்.

முன்னர் எங்களுக்கு பொறியியல் தொழில்நுட்பம் இருந்தது. கடந்த காலத்தில் எமது பொறியியல் தொழில்நுட்பத்துக்கு எந்தவொரு நாட்டுக்கும் சமமாக முடியாமல் இருந்தது. எகிப்து பிரமிட்களுக்கு சமமாக எமது நாட்டில் சைத்தியம் அமைக்கப்பட்டிருந்தது. தண்ணீரை மேல்மாடிக்கு கொண்டுசெல்ல முடியுமான முறை அமைக்கப்பட்டிருந்தது. சிகிரியாவில் அது இருந்தது. அவர்கள் பட்டம் பெற்றவர்கள் அல்ல.

எனவே, நாங்கள் புதிய பல்கலைக்கழகங்களை அமைப்போம். இந்தியாவின் உதவியுடன் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கொத்தலாவல பல்கலைக்கழகத்துக்கு குருணாகலை மற்றும் சீதாவக ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களையும் இணைப்போம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
13.12.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் சீர்குலைவை சரி செய்வதே முதன்மையானது

உலகத் தமிழர் பேரவையை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களின் முயற்சியை பல்வேறு புலம்பெயர் அமைப்புகளும் விமர்சித்திருக்கின்றன. அவர்கள் புலம் பெயர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பௌத்த பிக்குகளுடன் இணைந்து பிரகடனமொன்றை வெளியிட்டிருப்பதை பெரும்பான்மையான புலம்பெயர் சமூகம் வரவேற்றதாகத் தெரியவில்லை. தென்னிலங்கையை பொறுத்தவரையில் புலம் பெயர் சமூகத்தோடு அரசாங்கம் உரையாடி வருவதான ஒரு தோற்றம் ஏற்பட்டிருக்கின்றது. உலகத் தமிழர் பேரவையினர் இலங்கையில் தங்கியிருக்கும் சூழலில் சமத்துவம் மற்றும் நீதிக்கான அமெரிக்க அரசின் விசேட பிரதிநிதியான - டீசிரி கோமியர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்ற செய்தியும் வெளியாகியிருகின்றது.

இதேவேளை, தமிழத் தேசிய அரசியல் பரப்பின் பிரதான கூட்டணியான தமிழத் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான ரெலோ, “தனிநபர்கள் தமிழ் மக்களின் அரசியல் விவகாரங்களை கையாள முற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது”, என்று தெரிவித்திருக்கின்றது. இதிலுள்ள அடிப்படையான பிரச்னை வேறு. அதாவது, தமிழ் மக்களின் அரசியலை எவர் வேண்டுமனாலும் கையாளலாம் என்னும் நிலைமை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைமைகள் இருக்கின்றபோதும் அவர்கள் மத்தியில் ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்கள் இல்லை - தென்னிலங்கையோடு விடயங்களை கூட்டாகக் கலந்துரையாடும் போக்கு இல்லை. இந்த இடைவெளியாலேயே உலகத் தமிழர் பேரவை என்னும் பெயரில் புலம்பெயர் சமூக உறுப்பினர்கள் சாதாரணமாக விடயங்களில் தலையீடு செய்ய முடிகின்றது.

இது தொடர்பில் ‘ஈழநாடு’ தொடர்ந்தும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது. அதாவது, தாயக அரசியலை வேறு தரப்புகள் கையாள அனுமதிக்கக்கூடாது. புலம்பெயர் சமூகத்தின் உதவியை பெற வேண்டும் - அவர்களது ஆதரவு முக்கியமானது. ஆனால், தாயக அரசியலை தீர்மானிக்கும் உரிமையை அவர்கள் தன்னிச்சையாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கக்கூடாது. 2009வரையில் புலம்பெயர் அமைப்புகளும் தனிநபர்களும் வெறுமனே நிதியளிக்கும் கருவிகளாகவே இருந்தனர். ஆனால், விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியின் பின்னர்தான் ஆளுக்கொரு கடை என்னும் அடிப்படையில் பல்வேறு அமைப்புகளும் தனிநபர்களும் அரசியலில் தலையீடு செய்ய முற்பட்டனர்.

2009இற்கு பின்னரான தாயக அரசியல் தலைமைகளை மதித்து நடக்கும் போக்கு புலம்பெயர் அமைப்புகள் மத்தியில் பெரியளவில் இல்லை. தாங்கள் கூறுவதை இங்குள்ளவர்கள் கேட்க வேண்டும் என்னும் அடிப்படையிலேயே அவர்களது அணுகுமுறை இருந்தது. இந்தப் போக்கின் விளைவாக - விடுதலைப் புலிகளுக்கு அதிகம் உரிமை கோருவது யார் என்னும் அரசியல் போக்கொன்றும் உருவாகியது. அந்த உரிமையை அதிகம் தங்கள் வசப்படுத்துவதை ஓர் அரசியல் போக்காகவே கைக்கொண்டிருப்பவர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர்தான். அதேவேளை கிளிநொச்சியில் அந்த உரிமையை தன் வசப்படுத்துவதில் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முன்னணி வகிக்கின்றார். இவ்வாறு ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிலர் இந்த விடயத்தை தங்கள் வசப்படுத்த வேண்டும் என்பதில் முனைப்போடு செயல்படுகின்றனர். இதற்கு பின்னால் புலம்பெயர் குழுக்களின் நிதி ஆதரவும் உண்டு.

இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டியதை செய்யலாம் என்னும் சூழலில்தான உலகத் தமிழர் பேரவையினர் சிங்கள மக்களோடு உரையாடும் புதிய அத்தியாயமொன்றை ஆரம்பிக்கப் போவதாகக் கூறுகின்றனர். ஜனநாயக அரங்கில் எவரும் தங்களின் கருத்துகளை முன்வைக்கலாம் - அதற்காக அவர்கள் செயல்படலாம். ஆனால், அவ்வாறானவர்கள் தமிழ் மக்களின் பெயரால் விடயங்களை முன்னெடுப்பதுதான் சிக்கலானது. அது ஆபத்தானதும்கூட. ஏற்கனவே, பல புலம்பெயர் அமைப்புகள் ஒன்றுபட்டு சர்வதேச அரங்கில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி செயல்பட்டு வருகின்றபோது - இதேவேளை, தாயக தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கட்சிகளின் தலைவர்கள இந்தியாவின் உதவியை கோரி வரும் சூழலில் தன்னிச்சையாக சிங்கள மக்களோடு உரையாடப் போகின்றோம் என்று சிலர் தென்னிலங்கையில் சந்திப்புகளை மேற்கொள்வதானது அடிப்படையிலேயே தமிழர் அரசியலை பலப்படுத்தும் செயல்பாடுகளாக அமையாது. இவை அனைத்தும் தமிழ் அரசியலின் சீர்குலைவையே அடையாளப்படுத்தும். மற்றவர்களோடு உரையாட செல்வதற்கு முன்னர் தமிழத் தேசிய தரப்புகள் அனைவரும் ஒன்றுபட்டு தமிழர் அரசியலிலுள்ள சீர்குலைவை சரிசெய்ய வேண்டும்.

## 108 வருடங்களுக்கு முன் இராணுவ அதிகாரி கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணை

*கொழும்பு, டிசெ. 13*

*108 வருடங்களுக்கு முன்னர், இராணுவ அதிகாரியான எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் கொல்லப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்கு மூவர் கொண்ட குழுவொன்றை நியமிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*

*இலங்கையின் காலனித்துவ ஆட்சி காலத்தில் அரசாங்கத்துக்கு எதிராக கலகம் செய்து தேசத் துரோகம் செய்தமைக்காக ஹென்றி பேதிரிஸுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது.*

*எனினும், அப்போதைய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் மேற்கொண்ட சதித் திட்டத்தின் விளைவாகவே அவர் கொலை செய்யப்பட்டாரென தெரியவந்துள்ளது.*

*இந்தநிலையில், சம்பவம் தொடர்பான உண்மைகளை கண்டறிந்து, தண்டிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்கச் செய்யும் வகையில் அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன்வைக்க இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. (அ)*

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் பொலிஸ் பதிவு!

*மட்டக்களப்பு, டிசெ. 13*

*மட்டக்களப்பில் பொலிஸார் மீண்டும் குடியிருப்பாளர்களின் விபரங்களை கோரிய விண்ணப்ப படிவம் ஒன்றை வழங்கி தகவல் சேகரித்து வருகின்றனர்.*

*இந்தநிலையில், மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் முழு விபரங்களும் அடங்கிய விண்ணப்பப் படிவம் ஒன்றை வழங்கி தகவல்களை பெறும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.*

*பொலிஸ் பிரிவில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் தங்கியிருப்பவர்களின் விபரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 1865ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 75ஆவது பிரிவுக்கு அமைவாக செயல்படும் ஆணை எனும் தலைப்பில் விண்ணப்ப படிவம் ஒன்றை வழங்கி பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)*

## கொஸ்லாந்தையில் 41 குடும்பங்கள் இடம்பெயர்வு

*கொழும்பு, டிசெ. 13*

*மண்சரிவு அபாயத்தால் கொஸ்லாந்தை, கெலிப்பனாவல பகுதியிலிருந்து மேலும் 41 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.*

*இதற்கு முன்னரும் மண்சரிவு அறிகுறிகள் தென்பட்ட போது 31 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.*

## அநுரகுமாரவுக்கு காஞ்சன சவால்!

*கொழும்பு, டிசெ. 13*

*நிலக்கரி எரிபொருளில் தரகுப் பணம் பெற்றதை நிரூபிப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை தொலைக்காட்சி ஒன்றில் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.*

*நிலக்கரி அல்லது எரிபொருளை வாங்குமாறு யாரும் தனக்கு அழுத்தம் கொடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*எரிசக்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுகளின் செலவின ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் விஜயசேகர இதனைத் தெரிவித்தார்.*

*காஞ்சன விஜயசேகர மேலும் கூறுகையில்-*

*நிலக்கரி எரிபொருளில் இருந்து கொமிஷன் பெறப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். அவர் நமது அமைச்சின் அனைத்து பதிவுகளையும் சரி பார்க்க முடியும். எரிபொருள் இறக்குமதி தொடர்பான அனைத்து அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்திற்குள் நீங்கள் எதையும் கூறலாம்.*


*கடந்த 18 மாதங்களில் நிலக்கரி அல்லது எரிபொருள் இறக்குமதியில் ஏதேனும் ஊழல் செய்திருந்தால், அவர் வெளியில் நீதிமன்றத்துக்கு செல்லலாம் என்று நான் அவரிடம் கூறுகிறேன்.*

*மோசடி, ஊழல் பற்றிய தகவல்களுடன் விவாதத்துக்கு வந்தால் நானும் வருவேன்.*

*பிறகு அவருடைய அறிவை பார்த்துக்கொள்ளலாம்.தன்னிடம் கோப்புகள் இருக்கின்றன என்று அவர் எப்போதும் கூறுகிறார். ஆனால், ஒரு கோப்பு கூட தாக்கல் செய்யப்படவில்லை.*

*எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். அதுபற்றி யாரும் என்னை வற்புறுத்துவதில்லை. மோசடி நடந்தால் எந்த நீதிமன்றத்துக்கும் செல்லலாம்- என்றார். (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**டிசெம்பர் - 13 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - கார்த்திகை 27**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : பிரதமை**




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் செயல்பட தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். அதிர்ஷ்டம் பெறும் நாள்.

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். வெற்றி பெறும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். நல்லன நடக்கும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். ஊழியர்களிடம் வளைந்து போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**மகரம்**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனையை ஏற்கப்படும். புகழ் கௌரவம் கூடும்.

**கும்பம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# மிச்சாங் புயல், வெள்ள பாதிப்புகளை தமிழக அரசு சிறப்பாக கையாண்டது

## மத்திய அரசின் குழு பாராட்டு

**சென்னை, டிசெ. 13**

**மிச்சாங் புயல், மழை வெள்ள பாதிப்புகளை தமிழக அரசு மிகச் சிறப்பாக கையாண்டதாக மத்திய அரசின் குழு ஆய்வுக்கு பிறகு தெரிவித்துள்ளது.**

மிச்சாங் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு குறித்து ஆய்வு செய்ய தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையில் மத்திய குழுவினர், விமானம் மூலம் திங்கள்கிழமை இரவு சென்னை வந்தடைந்தனர்.

நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, மத்தியக் குழுவினருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். வெள்ள பாதிப்புகள் குறித்து அவர் உள்ளிட்ட அதிகாரிகள் மத்திய குழுவினரிடம் எடுத்துரைத்தனர்.

இதையடுத்து, மத்திய குழுவினர் மிச்சாங் புயலால் அதிகம் பாதிக்கப்பட்ட சென்னை வேளச்சேரி, பள்ளிக்கரணை உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். மற்றொரு குழுவினர் வட சென்னை பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த நிலையில், ஆய்வுக்குப் பிறகு செய்தியாளர்களை சந்தித்த அவர்கள்,

"மிச்சாங் புயல், வெள்ள பாதிப்புகளை மிகச் சிறப்பாக கையாண்டதற்காக தமிழக அரசுக்கு பாராட்டு தெரிவிக்கிறோம். அதிக அளவிலான மழை பெய்ததால் தண்ணீர் தேங்கியது. தமிழக அரசு தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை செய்த போதிலும், எதிர்பாராத விதமாக புயல் சென்னை அருகே நீண்ட நேரம் மையம் கொண்டதால் பாதிப்பு அதிகமாகியுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மிக விரைவாக இயல்பு நிலைக்கு சென்னை திரும்பியுள்ளது. அரசின் நடவடிக்கையால் உயிர்சேதம் மிகவும் குறைந்துள்ளது.

வெள்ளப் பாதிப்புகளில் இருந்து சென்னை மீண்டு வருவதற்கான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும்." என்று மத்திய குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிப்பதற்கு தி. மு. க. முயற்சி!

## பாரதிய ஜனதா கட்சி சாடல்

*சென்னை, டிசெ. 13*

ஜனநாயகத்தின் உயிர்நாடியான பாராளுமன்றத்தில் பிரிவினைவாதம் பேசி ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்க முயன்ற தி. மு. கவின் முயற்சி முறியடிக்கப்பட்டது என்பதை முதல்வர் உணர்ந்து கொள்ள வேண்டும் என பா. ஜ. க. மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி தெரிவித்துள்ளார்.

பாஜக மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "பிரிவினைவாத கருத்துகளை பாராளுமன்றத்தில் பேசிய தன் கட்சியின் உறுப்பினருக்கு ஆதரவாக களம் இறங்கியுள்ளார் முதல்வர் மு. க. ஸ்டாலின் . பாராளுமன்றத்திலேயே கருத்துரிமையின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது. என்கிறார். ஜனநாயகத்தின் உயிர்நாடியான பாராளுமன்றத்தில் பிரிவினைவாதம் பேசி ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்க முயன்ற தி. மு. கவின் முயற்சி நேற்று முறியடிக்கப்பட்டது என்பதை முதல்வர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இது நாள் வரை மொழி ரீதியாக, சாதி ரீதியாக, மத ரீதியாக நாட்டை பிளவுபடுத்த முயற்சித்து கொண்டிருந்தவர்கள் வருகின்ற பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர், பா. ஜ. கவின் ஆட்சியே தொடரும் என்ற நிலையை உணர்ந்து, பயங்கரவாதத்தின் பிடியில் இருந்த காஷ்மீர் அமைதி பாதைக்கு திரும்பியுள்ளதை ஏற்றுக்கொள்ளாமல், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்காமல் இன ரீதியிலான பிரிவினைவாதத்தை விதைக்க நினைப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது - என்றுள்ளது. (ஐ)

### கொடநாடு கொலை வழக்கு

# நேரில் சாட்சியம் அளிப்பதற்கு பழனிசாமிக்கு விலக்களிப்பு!

*சென்னை, டிசெ. 13*

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் நேரில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்க அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு (இ. பி. எஸ்) விலக்கு அளித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடநாடு கொலை, கொள்ளை தொடர்பாக உயிரிழந்த சாரதி கனகராஜ் சகோதரர் தனபால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில், நேரில் முன்னிலையாகி சாட்சியம் அளிப்பதில் இருந்து விலக்கு கோரி அதிமுக பொதுச்செயலாளர் இ.பி.எஸ் சார்பில் வாதிடப்பட்டது. அப்போது, நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இ.பி.எஸ்ஸுக்கு விலக்கு அளித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், இ.பி.எஸ்ஸிடம் சாட்சியங்களைப் பதிவு செய்ய வழக்கறிஞர் எஸ். கார்த்திகை பாலனை நியமித்தும் உத்தரவிடப்பட்டது. வழக்கறிஞர் ஆணையரான இவர், சாட்சியப்பதிவை ஒரு மாதத்தில் முடிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# ஆங்கிலத்தை காட்டிலும் தமிழ் மொழியே சிறந்தது

## தமிழ்நாடு ஆளுநர்

*சென்னை, டிசெ. 13*

அறிவியல் சொற்றொடரிலும், இலக்கண வளத்திலும் ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழே சிறந்தது என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் கூறியிருப்பதாவது: காலனி ஆதிக்கம் உள்ளூர் மொழிகளை அடிமை மொழி எனக் கூறி அறிவியலை பயிற்றுவிக்கும் விதத்தில் இந்தியாவில் ஆங்கிலம் திணிக்கப்பட்டது. அறிவியல் சொற்றொடரிலும், இலக்கண வளத்திலும் ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழே சிறந்தது.

திருவள்ளுவருடன் ஷேக்ஸ்பியரை ஒப்பிடுவதை நிறுத்த வேண்டும். 20 ஆண்டுகளில் இந்தியா வளர்ந்த நாடாக உருவாக இளைஞர்கள் பங்கெடுக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# இலங்கை மீண்டும் இருளில் மூழ்கும்!

## பொறியியலாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 13

**பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாவிட்டால் நாடு மீண்டும் இருளில் மூழ்கும் என இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

கடந்த சனிக்கிழமை இரவு நாடளாவிய ரீதியிலும் திடீரென மின் தடை ஏற்பட்டது.

மின் விநியோக பாதை அமைப்பில் ஏற்பட்ட மின்னல் தாக்கம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மின்சார விநியோக பாதை முறைமையை புனரமைக்க வேண்டுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னர் பரிந்துரைத்திருந்ததாக இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் நந்தன உதயகுமார தெரிவித்தார்.

ஆனால் அந்த பரிந்துரைகள் இதுவரை அமல்படுத்தப்படவில்லை என்றும் குறித்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாவிட்டால் நாடு மீண்டும் இருளில் மூழ்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்காலத்தில் மின் கட்டணத்தை குறைப்பது மற்றும் மின்சார கட்டணத்தை நிர்ணயிக்கும் புதிய முறை தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் நேற்று நடைபெற்றது. (அ)

# அநுராதபுரம் மாவட்டத்தில் எச்.ஐ.வி நோயாளர்களின் வீதம் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 13

அநுராதபுரம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் எச்.ஐ.வி நோயாளர்களின் வீதம் குறித்து மாவட்ட சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிமல் ஆரியரத்னவின் தகவல்படி, இந்த வருடத்தில் 19 எச்.ஐ.வி நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறித்த நோயாளிகளில் பெரும்பான்மையானவர்கள் ஆண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிலும் ஆண்களின் இந்த கூர்மையான அதிகரிப்புக்கு ஓரினச்சேர்க்கை உறவுகள் காரணமாக இருக்க வேண்டும் என்று நிமல் ஆரியரத்ன தெரிவித்தார். (அ)

# ஹரக் கட்டாவை தப்பவைக்க முயன்ற இராணுவச் சிப்பாய் விளக்கமறியலில்

கொழும்பு, டிசெ. 13

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் ஹரக் கட்டா எனப்படும் நதுன் சிந்தக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து தப்பிக்க வைக்க முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான இராணுவச் சிப்பாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த குறித்த இராணுவ சிப்பாய் இன்றைய தினம் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அதன்போது, அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டார். (அ)

# மக்களுக்கு வரி விதித்தமையினால் அலரி மாளிகையில் கொண்டாட்டம்!

கொழும்பு, டிசெ. 13

பெறுமதி சேர் வரியை 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தியதை கொண்டாடும் வகையில் அரசாங்கம் அலரிமாளிகையில் நேற்றிரவு விருந்து நடத்தியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்களின் வாழ்வாதாரத்தை மேலும் பேரழிவிற்குள்ளாக்கும் வற் அதிகரிப்பைக் கொண்டாடும் வகையில் பிரதமர் நடத்திய விருந்தில் ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டதாக அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வற் அதிகரிப்புக்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப்



போவதில்லை என்று கூறிய பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் வற் அதிகரிப்பைக் கொண்டாடுவதற்காக விருந்தில் கலந்து கொண்டதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

பெரமுனவின் இந்த இரட்டை நிலை ஏன்?" என்று அவர் கேட்டார். (அ)

# 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அடுத்த ஆண்டு வரவழைக்க திட்டம்

கொழும்பு, டிசெ. 13

2024 ஆம் ஆண்டில் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதற்குத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது அதற்கு சமாந்தரமாக உட்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இவ்விடயம் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

எதிர்வரும் ஆண்டில் செல்வந்த நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளை அதிகம் வரவழைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் இலங்கையிலுள்ள மக்கள் சமூகம் தயாராக இருப்பதன் அவசியமும் குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது. சுற்றுலா பயணிகளிடம் பணம் மோசடி செய்வதை நிறுத்திவிட்டு, சுற்றுலா பயணிகளை மரியாதையுடன் வரவேற்பதற்கான கட்டமைப்பு தயார் செய்யப்பட வேண்டும் என்றும் குழுவில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர். தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் ஏற்கனவே இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்ளூர் மட்டத்தில் சுற்றுலாத் தளங்களைக் கொண்ட இடங்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைத் தயாரிப்பது முக்கியம் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

மேலும், கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் "கைத்தொழில் கிராமங்கள்" திட்டத்தின் செயற்பாடுகள் குறித்தும், அவற்றை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்துவது என்பது குறித்தும் இங்கும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# இளைஞர்கள் விவசாயத்துறையில் அதிகளவு ஆர்வம் காட்டவேண்டும்

## அமைச்சர் மகிந்த அமரவீர கோரிக்கை

கொழும்பு, டிசெ. 13

இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின் பக்கம் ஈர்க்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இளைஞர்கள் விவசாயத்தை விட்டுத் தூரமாகியுள்ளமை எமக்குள்ள பாரிய பிரச்னையாகும்.

வருமானம் போதாமை உட்பட இன்னும் பல்வேறு காரணங்களினால் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. எனவே அவர்களை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இதற்காக விவசாய நவீனமயப்படுத்தல் பணிகளை மேலும் வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அனைத்து துறைகளினதும் ஒத்துழைப்புடனும் தற்போது எமது அமைச்சு முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை கண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு 04 வகையான பயிர்களை முதன்மைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். நெல் தற்போது வெற்றிகரமான நிலையை அடைந்துள்ளது.

அதனுடன் சோளம், மிளகாய், உருளைக் கிழங்கு ஆகிய வற்றை பயிரிடுவதற்கு மக்களைத் தூண்டுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதற்காக நாம் ஏற்கனவே



ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். கடந்த காலங்களில் முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

அது தொடர்பில் நாம் விசேட வேலைத்திட்டமொன்றை தயாரித்துள்ளோம். அடுத்த வருடம் முதல் முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது.

அதேபோன்று கோழி இறைச்சி இறக்குமதி செய்ய அனுமதி கோரப்பட்டாலும் கூட நாம் அதற்கு அனுமதி வழங்கவில்லை-என்றார். (அ)

# இறைச்சிக்கான கோழி வளர்ப்பில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள்!

கொழும்பு, டிசெ. 13

பன்றிகளுக்கு உணவளிப்பதற்காக வளர்க்கப்படும் 50 ஆயிரம் கோழிக் குஞ்சுகளை, இறைச்சிக்கான கோழி வளர்ப்பில் ஈடுபடுவதில் ஆர்வமுடையவர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கு தேசிய கால்நடை அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு குறித்த கோழிக்குஞ்சுகளை இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, முட்டை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நாட்டுக் கோழிகளை இலவசமாக வழங்கும் வேலைத்திட்டமொன்றை தேசிய ஹதபிம அதிகாரசபை முன்னெடுத்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக, இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 20 ஆயிரம் நாட்டுக் கோழிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் டெங்கு பரவும் அபாயம் அதிகம்!

கொழும்பு, டிசெ. 13

புத்தளம், நாத்தாண்டி, குருநாகல், பதுளை மற்றும் ஹாலி-எல ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா மாவட்டங்களிலும் டெங்கு அபாயம் மேலும் அதிகரித்துள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி அஷானி ஹேவகே குறிப்பிட்டார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், நாட்டில் 80222 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(அ)

# பாராளுமன்ற அமர்வை நடத்த ஒரு நாள் 1 கோடி ரூபா செலவு!

## அமைச்சர் பிரசன்ன தகவல்



கொழும்பு, டிசெ. 13

**பாராளுமன்றத்தை நடத்த ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபா செலவிடப்படும் நிலையில் எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே ஞாயிற்றுக்கிழமை விவாதத்தை "கூட்ட நடப்பெண்" கோரி இடைநிறுத்தியதாக அரச தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க குற்றம் சாட்டினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு குற்றம்சாட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

டிசெம்பர் 20ஆம் திகதி திங்கட்கிழமை சபை நடவடிக்கைகளின் அறிக்கை என்னிடம் உள்ளது. எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று ஞாயிற்றுக்கிழமை வற் வரி சட்டமூலம் மீதான பாராளுமன்ற விவாதம் நடைபெற்றது.

பாராளுமன்றத்தை நடத்த ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா செலவிடப்படுகிறது. ஆனால் இந்த விவாதத்தால் நாட்டுக்கு நன்மை கிடைக்கும் என்பதால் விவாதத்தை நடத்த விரும்பினோம்.

பாராளுமன்ற ஊழியர்கள் தொடர்ந்து வேலை செய்கிறார்கள். இது எளிதானது அல்ல. ஆனால் எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே இந்த விவாதத்தை முறியடித்தன.

அதனால் தான் அவர்கள் "நடப்பெண்" கோரினார்கள் எதிர்க்கட்சியினர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டனர் -என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரசன்ன ரணதுங்க சபையையும் நாட்டையும் தவறாக வழிநடத்துகிறார்.

தெரிவுக் குழுவின்போது விவாதத்தை நடத்துவது எதிர்க்கட்சியின் பொறுப்பு. ஆனால் ஞாயிற்றுக்கிழமை குழுநிலை நிகழ்வு அல்ல-என்றார்.

மீண்டும் எழுந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சித் தலைவருக்கு புத்தி சாதுர்யம் இல்லை என மக்கள் கூறுகின்றனர்.

நான் அதை ஏற்கவில்லை. எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்றுத்தான் ஞாயிற்றுக்கிழமை விவாதம் நடைபெற்றது. வார நாட்களில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் விவாதம் நடத்துவோம் என்று தான் நாங்கள் சொன்னோம்-என்றார்.

இதன்போது சபாநாயகர், மஹிந்த யாப்பா அபேவர்தன, தயவுசெய்து இந்த விவாதத்தை நிறுத்துங்கள். இன்றும் நேரத்தை வீணடிக்க முயற்சிக்கிறார்கள்- என்றார்.

மீண்டும் எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு பேசுவதற்கு உரிமை உண்டு. எங்களுக்கும் பதில் அளிக்க வாய்ப்பளிக்க வேண்டும்-என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வரான, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த குழுநிலையில் எதிர்க்கட்சிகளுக்கு நேரம் கிடைக்கும். அது குறையாது. அது முடிந்தவுடன், ஞாயிற்றுக்கிழமையின் மீதி நேரம் எடுக்கப்படும் என்றார். (அ)

# சந்தேக நபர்களை வீட்டுக் காவலில் வைத்திருக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 13

சந்தேகநபர்களை தடுப்புக் காவலில் வைப்பதற்கு பதிலாக வீட்டுக் காவலில் வைத்திருப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் நிலவுகின்ற நெரிசல் காரணமாக குறித்த யோசனை முன்மொழியப்பட்டது.

இந்த நிலையில், குறித்த பிரச்சனைக்குத் தீர்வாக தடுப்பு காவலில் வைத்தல் மற்றும் சிறைச்சாலையில் வைப்பதற்கு பதிலாக உரிய வழக்கு நடவடிக்கைகளின்போது சந்தேகநபர்களை வீட்டுக் காவலில் தடுத்து வைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி, பொருத்தமான சட்டங்களை அறிமுகம் செய்வதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# பணிப் பகிஷ்கரிப்பினால் 10 இலட்சம் கடிதம் தேக்கம்

கொழும்பு, டிசெ. 13

தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள அடையாள வேலைநிறுத்தம் நேற்று நள்ளிரவு வரை முன்னெடுக்கப்பட்டது என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

சுமார் 10 இலட்சம் கடிதங்கள் கொழும்பு மத்திய தபால் பரிமாற்றகம் மற்றும் நாட்டின் ஏனைய தபால் அலுவலகங்களிலும் தேங்கியுள்ளதாக அந்த முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

தபால் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஞாயிறு பிற்பகல் முதல் இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக கடிதங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் முடங்கியுள்ளதாகவும் மத்திய தபால் பரிமாற்றகத்திலிருந்து எந்தவொரு தபால் பொருட்களையும் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. (அ)

# 1,500 தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் நாட்டில் மூடப்பட்டன!

கொழும்பு, டிசெ. 13

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் காரணமாக உள்நாட்டில் உள்ள 1,500 தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

நாட்டின் வருடாந்த தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி, 2 இலட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும்.

இந்தநிலையில், ஒரு கோடியே 77 இலட்சம் கிலோகிராம் அளவில் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இதற்காக 7 ஆயிரத்து 891 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் தமது தொழிற்துறை பாரியளவில் பாதிப்படைந்துள்ளதாக, தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

காலி முகத்திடல் போராட்ட விவகாரம்

# உயர்நீதிமன்றில் மன்னிப்பு கோரிய பாதுகாப்புத்துறை!

கொழும்பு, டிசெ. 13

2022 ஆம் ஆண்டில் கோட்டாபய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் காலி கோட்டைப் பகுதியில் சட்டத்தரணிகள் சிலர் எதிர்ப்பில் ஈடுபடத் தயாரானபோது, அதற்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில், பொலிஸாரும், இராணுவத்தினரும் உயர் நீதிமன்றில் மன்னிப்பு கோரியுள்ளனர்.

11 சட்டத்தரணிகள் இணைந்து முன்வைத்த மனு நேற்று முன் தினம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, உயர் நீதிமன்றில் முன்னிலையான காவல்துறையினரும், இராணுவத்தினரும் சட்டத்தரணிகளிடம், தமது தவறுக்காக வருந்துவதாக தெரிவித்ததுடன், அதற்காக மன்னிப்பும் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போராட்டம் இடம்பெற்ற காலத்தில், இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய ஆகிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி காலி சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றிருந்தது.

இதன்போது, கடந்த அரசாங்கத்திற்கு எதிராக, சட்டத்தரணிகள் காலி கோட்டை பகுதியில் எதிர்ப்பு பதாகைகளை காட்சிப்படுத்த முற்பட்டனர்.

இதற்கு, காவல்துறை மற்றும் இராணுவத்தினர் இணைந்து இடையூறு ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டி உயர் நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாடு இழக்கக்கூடிய வருமானத்தை மீளப்பெற முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம்

கொழும்பு, டிசெ. 13

நாடு இழக்கக்கூடிய வருமானத்தை மீளப்பெறுவதற்கு அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டது வேறு எந்த காலத்திலும் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டங்களை பலப்படுத்துவதன் மூலம் சாத்தியமான அனைத்து ஓட்டைகளையும் அடைக்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன வாய்மூல பதில்களை எதிர்பார்த்து சமர்ப்பித்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே சியம்பலாபிட்டிய இதனை நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மதுப் போத்தல்களில் போலியாக ஸ்ரிக்கர் அச்சிடப்பட்டமை தொடர்பிலான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இது தவிர, மது உற்பத்தி நிறுவனங்களுக்கு இயக்கப்படும் கலால் அதிகாரிகள் 6 மாதங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்படுவார்கள், மேலும் ஊடுருவல் கேமரா அமைப்புகள் மூலம் உற்பத்தி செயல்முறை கண்காணிக்கப்படும்.

இந்த நடவடிக்கைகளினால் கடந்த மூன்று மாதங்களில் சுமார் ஒரு பில்லியன் ரூபா வரி வருமானம் அதிகரித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கடலில் நீராட சென்ற ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 13

பெந்தோட்டை கடலில் நீராடச் சென்று நீரில் மூழ்கிய இரண்டு இளைஞர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த இருவரும் கடலில் நீராடச் சென்ற நிலையில், அலையினால் இழுத்து செல்லப்பட்டதை அடுத்து, அங்கிருந்த உயிர்காக்கும் படையினரும் பொதுமக்களும் இணைந்து அவர்களை மீட்டனர்.

மீட்கப்பட்ட இளைஞர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பேருவளை பகுதியை சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் என தெரிய வந்துள்ளது.

மற்றைய இளைஞர் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 80,222 டெங்கு நோயாளர்கள் பதிவு

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வரும் நிலையில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 80 ஆயிரத்து 222 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு 47 மரணங்கள் பதிவாகியுள்ளன.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் 46.4 சதவீத நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் 16,948 நோயாளர்களும் கம்பஹா மாவட்டத்தில் 15,419 நோயாளர்களும் களுத்துறை மாவட்டத்தில் 4,849 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய 61 சுகாதார மருத்துவ பிரிவுகள் டெங்கு அபாயம் மிக்க மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (அ)

# எரிவாயு விலை மீண்டும் பாரியளவில் உயர்கிறது!

## வரி அதிகரிப்பின் எதிரொலி

கொழும்பு, டிசெ. 13

**வற் வரி அதிகரிப்பால் எரிவாயு விலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.**

**வற் வரியை 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக உயர்த்தும் வரி திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.**

இதன் காரணமாக எதிர்காலத்தில் இடம்பெறும் எரிவாயு விலை திருத்தத்தில் விலை உயர்வு ஏற்படும் எனவும் அரச தரப்பு செய்திகள் கூறுகின்றன.

எரிவாயுவுக்கு இதுவரை வற் வரி விதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், நேற்று முன்தினம் முதல் எரிவாயு மீது வற் வரி விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எரிவாயு விலைகள் அதிகபட்சமாக 18 வீதம் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லிட்ரோ சமையல் எரிவாயு விலை கடந்த மாதம் 04ஆம் திகதி அதிகரிக்கப்பட்டிருந்த பின்புலத்தில் மீண்டும் அதிகரிக்கப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற விலை திருத்தத்தில் 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 95 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. அதன் புதிய விலை 3,565 ரூபாவாக காணப்படுகின்றது.

05 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 38 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. அதன் புதிய விலை 1,431 ரூபாவாக உள்ளது.

2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 18 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 668 ரூபாவாக காணப்படுகின்றது.

(அ)

# வெங்காயத்தின் விலை உச்சம்!

கொழும்பு, டிசெ. 13

சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்துள்ளது.

இந்த இரண்டு நாட்களில் சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை 100 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி தற்போது சில்லறை சந்தையில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 380.00 முதல் 450.00 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் 480.00 ரூபாவிற்கும் பெரிய வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை, நேற்று முன்தினம் சதொசவில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 365.00 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

(அ)

# குழு மோதலில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 13

குருநாகல் - மாவத்தகம பிளஸ்ஸ பகுதியில் இரண்டு குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த மோதலில் மேலும் ஒரு இளைஞர் காயமடைந்த நிலையில், குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு குறித்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், அதன் பின்னர் அங்கு அமைதியின்மை ஏற்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

இதனையடுத்து, பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அங்கு பாதுகாப்பில் தொடர்ந்தும் ஈடுபடுத்தப்பட்டனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பிளெஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அத்துடன், மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)

# 83 இலட்சம் ரூபா நிதி மோசடியில் நிறுவன பணிப்பாளர் இருவர் கைது

கொழும்பு, டிசெ. 13

83 இலட்சம் ரூபா நிதி மோசடி தொடர்பில் நிறுவனமொன்றின் இரண்டு பணிப்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த நிதி மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுக்கு கிடைத்த தகவலின் பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் கொழும்பு 5 பிரதேசத்தைச் சேர்ந்த 54 மற்றும் 55 வயதுடையவர்களாவர்.

சந்தேக நபர் இருவரும் சகோதரர்கள் எனவும் இவர்கள் நிறுவனமொன்றில் பணிப்பாளர்களாக செயற்பட்டவர்கள் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# தபால் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வில்லை

## இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார

கொழும்பு, டிசெ. 13

தபால் தொழிற்சங்கங்களின் உள்ளக பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடியுள்ளதுடன், தீர்வுகளை முன்வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

தபால்துறைசார் தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை மற்றும் அதனை நிவர்த்தி செய்வதற்கான முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த சபையில் நேற்று கேள்வி எழுப்பினார்.

குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் தொடர்ந்து கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர்.

நுவரெலியா தபால் நிலையத்தை தனியாருக்கு வழங்குதல் மற்றும் 20,000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமை என்பனவே இவர்களது பிரதான பிரச்சினையாக காணப்படுகின்றது.

தபால் திணைக்களம் தொடர்ந்து நட்டமடைந்து வரும் நிலையில் இந்த அதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தபால்துறைக்கு சமமான சேவையை வழங்கும் தனியார் நிறுவனங்கள் தொழிற்சங்கங்களின் போராட்டத்திற்குப் பின்னால் இருப்பதாக சந்தேகம் எழுகின்றது.

ஏனெனில், எமது சேவையை ஒத்த சேவையினை வழங்குவதற்கும் வருமானத்தை பெறுவதற்கும் பாரியளவிலான தனியார் நிறுவனங்கள் காணப்படுகின்றன.

தபால் தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் பிரதான கோரிக்கைகள் இரண்டும் கொள்கை ரீதியானது. இதற்கு எம்மால் தீர்வு வழங்க முடியாது.

நுவரெலியா தபால் நிலையம் அபிவிருத்தி திட்டத்திற்கு வழங்கப்படுகின்ற போதும் அதற்கு பதிலாக பிறிதொரு இடம் பெற்றுக்கொடுக்கப்படும் -என்றார்.

(அ)

# அவுஸ்திரேலிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் ரணில்-அநுர சபையில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, டிசெ. 13

**அவுஸ்திரேலிய நிறுவனத்துடன் அதிக விலையில் இலங்கை அரசாங்கம் சூரிய காற்றாலை மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தத்தை மேற்கொள்ளவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.**



அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட நிறுவனமான யுனைடெட் சோலார் குழுமத்துடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை பச்சைக்கொடி காட்டியுள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

கிளிநொச்சி பூநகரியில் இடம்பெறவுள்ள இந்த திட்டத்தின் ஊடாக மின் கட்டணம் குறைக்கப்படும் என மக்கள் எதிர்பார்க்கும் சூழலில் சூரிய சக்தி மின்சாரம் ஒரு யுனிட்டை 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையால் மேலும் கட்டண அதிகரிப்பே ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

என்றாலும், அநுரகுமார திஸாநாயக்க எம்.பியின் குற்றச்சாட்டை நிராகரித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

யுனைடெட் சோலார் குழும் இந்தத் திட்டத்தை முன்மொழிந்துள்ளது. இங்கு பூநகரி குளத்தின் மேற்பரப்பில் உருவாக்கப்படும் சூரிய சக்தி காற்றாலைகள் ஊடாக மின்சாரத்துக்கு மேலதிகமாக, விவசாயத்துக்கும் நீரை பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று ஆசியாவில் பெரிய பேட்டரி ஆற்றல் சேமிப்பும் இங்கு இடம்பெற உள்ளது.

மின்சார சபையின் பொறியியலாளர்கள் பலர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, "இந்த ஒப்பந்தத்தின் மூலம், 1500 மெகாவாட் பற்றரி ஆற்றல் சேமிப்பு அமைப்புடன் 700 மெகாவாட் சூரிய மின்சக்தியும் உற்பத்தி செய்யப்படும்.

1,727 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

யுனைடெட் சோலார் குழுமத்தின் உள்ளூர் துணை நிறுவனமான யுனைடெட் சோலார் எனர்ஜி ஸ்ரீலங்கா (பிரைவேட்) லிமிடெட், திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

முன்மொழியப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக, பூநகரி குளத்தைச் சுற்றி கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கவும் குளத்தை புனரமைக்கவும் 13.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 03 தடுப்பணைகளை அமைக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

வடமாகாண சபை, வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியன இணைந்து 700 மெகாவாட் மின்சார உற்பத்தியை மேற்கொள்ள 35 வருட குத்தகை ஒப்பந்தத்தில் குறித்த நிறுவனத்திற்கு 1080 ஏக்கர் ஆழமற்ற குளத்தை வழங்குவதற்கு ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளன.

அதன்படி, யுனைடெட் சோலார் எனர்ஜி சிறீலங்கா (பிரைவேட்) லிமிட்டெட் சமர்ப்பித்த திட்டப் பிரேரணையை கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதற்கும் மேற்படி பிரேரணையை மதிப்பீடு செய்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பக்கும் குழுவை நியமிப்பதற்கு கடந்த செப்டெம்பர் மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது" என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ)

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த மனுவில் திருத்தம்

கொழும்பு, டிசெ. 13

பிற மதங்களை அவமதித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டில் தம்மை கைது செய்வதை தடுக்குமாறு போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த மனுவில் திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அவரது சட்டத்தரணி நேற்று உயர் நீதிமன்றுக்கு அறிவித்தார்.

மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி நியன்சி அர்சகுலரத்ன, ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தின் கீழ் தமது கட்சிக்காரரின் கைது சட்டத்துக்கு முரணானது என தெரிவித்தார்.

இதன்படி, தற்போதுள்ள மனுவில் திருத்தம் செய்வதற்கு அல்லது இது தொடர்பான புதிய மனுவொன்றை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் சட்டத்தரணி அறிவித்தார்.

(அ)

# சம்மாந்துறை வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட ரிஷாத் எம்.பி!

அம்பாறை, டிசெ. 13

**அம்பாறை, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், அங்குள்ள குறைகளைக் கேட்டறிந்து வைத்தியசாலையின் அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடினார்.**



வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம். ஹனீபா, வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு தலைவர் வைத்தியர் இஸ்ஸடீன், திட்டமிடல் பிரிவு வைத்தியர் நியாஸ், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான ஹனீபா, வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் மற்றும் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களான மாஹிர், தாஹிர், அஸ்மி , காதர், நியாஸ் உள்ளிட்ட பலர் இக்கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். (அ)

# பெண் யானையின் சடலம் மீட்பு



திருமலை, டிசெ. 13

திருகோணமலை மாவட்டம், கிண்ணியாவில் வான்-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருனலு குளத்தில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

யானையின் சடலம் தொடர்பில் அப்பகுதி விவசாயிகள், வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தெரிவித்துள்ளதை தொடர்ந்து, கந்தளாய் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்று யானையின் மரணம் குறித்து விசாரணை மேற்கொண்டனர்.

இதற்கமைய 8 வயது மதிக்கத்தக்க பெண் யானையே உயிரிழந்ததாக கூறப்படுகிறது. (அ)




# திருமலை சென்.யோசப் கல்லூரியில் ஒளி விழா

திருமலை, டிசெ. 13

திருகோணமலை புனித யோசப் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "ஒளிவிழா" கல்லூரி அதிபர் சீ.தியாகு பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி,உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கிறிஸ்தவ,இந்து மற்றும் முஸ்லிம் மாணவர்கள் பங்கேற்றனர். (அ)

# சாய்ந்தமருது அஷ்ரப் வித்தியாலயத்துக்கு கணினி மேசைகள், கதிரைகள் அன்பளிப்பு

அம்பாறை, டிசெ. 13

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் தற்போது பாடசாலைக்கு மிகவும் அவசிய தேவையாக இருந்த பாடசாலைத் தளபாடங்கள் தொடர்பான கோரிக்கை ஒன்றினை பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீரிடம் முன்வைத்தனர்.

பாடசாலையினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்ததிற்கு மிகவும் அவசிய தேவையாக இருந்த ஒரு தொகுதி தளபாடங்களை பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீர் சொந்த நிதியின் மூலம் வழங்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.



பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல சமூக சேவையாளரும், தொழிலதிபரும், நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகரும், பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் கலந்து சிறப்பித்ததோடு தளபாடங்களையும் வழங்கினார்.

இந் நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த அடைவு மட்டங்களை காட்டிய மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் பிரதம அதிதியினால் வழங்கப்பட்டது. (அ)

# சிறப்பாக இடம்பெற்ற வீரத்திடல் மாணவர் பாராளுமன்ற நிகழ்வு



அம்பாறை, டிசெ. 13

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி பிரதேச வீரத்திடல் அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தின் முதல் மாணவர் பாராளுமன்ற நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு பார்வையாளர்களாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா, வலய மாணவர் பாராளுமன்ற இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எச். நைரூஸ்கான் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முறையான பாராளுமன்ற அமர்வு போன்று மாணவர் பாராளுமன்ற நிகழ்வு முறைப்படி செங்கோல் சபாநாயகர் பிரசன்னத்துடன் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் நடைபெற்றது. (அ)

# சம்மாந்துறையில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு!

அக்கரைப்பற்று, டிசெ. 13

கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் சஹிலா இஸ்ஸதீனின் பணிப்புரைக்கு அமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஐ.எம் கபீரின் வழி காட்டலின் கீழ் சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர் சி.பி.எம் ஹனீபா தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள், டெங்கு களத்தடுப்பு உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை பொலிஸ் உத்தியோகத்தகர்கள்,பிரதேச சபை ஊழியர்கள் இணைந்து நேற்று சம்மாந்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வீட்டுக்கு வீடு பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட வீடுகளில் மேற்கொள்ளப்பட்டதாகவும், நுளம்பு பரவலில் இனம் காணப்பட்டோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் டெங்கு நுளம்பு பரவக்கூடிய 31 இடங்கள் அடையாளம் காணப்பட்டு சிவப்பு எச்சரிக்கை அட்டைகள் 07 ஒட்டப்பட்டதாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஐ.எம் கபீர் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# காஸாவில் நிரந்தரமாக தங்கும் எண்ணம் இஸ்ரேலுக்கு இல்லை!

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் கொலன்ட்

ஜெருசலேம், டிசெ. 13

காஸாவிலேயே நிரந்தரமாக இருந்துவிடும் எண்ணம் இஸ்ரேலுக்கு இல்லை என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கொலன்ட் தெரிவித்துள்ளார். மாறாக காஸாவை யார் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள் என்ற ஆலோசனையில் ஈடுபட இஸ்ரேல் தயாராக இருக்கிறது. காஸாவில் அதிகாரம் செலுத்தப்போவது இஸ்ரேலுக்கு விரோதமான குழுவாக இல்லாமல் இருப்பது மட்டும் அவசியம் - என்றார்.

நிரந்தர தீர்வுக்காக ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லாக்களுடன்கூட ஆலோசனை நடத்த இஸ்ரேல் தயாராகவே இருக்கிறது. ஆனால், எல்லை பாதுகாப்புக்கு உரிய உத்தரவாதம் அளித்தால் மட்டுமே அது சாத்தியம் என்றும் அவர் கூறினார். ஹமாஸை அழிக்க இஸ்ரேல் எந்த மாதிரியான நடவடிக்கையை எடுக்கவும் தயார். ஆனால், அதற்காக நிரந்தரமாக காசாவிலேயே இருந்துவிடும் எண்ணம் இல்லை.

ஹமாஸ் குழுவினர் தாமாக முன்வந்து சரணடையலாம். அவ்வாறு சரணடைந்தால் அவர்களின் உயிராவது மிஞ்சும். இல்லாவிட்டால் அவர்களின் விதி எங்கள் கைகளில் என்றார்.

இஸ்ரேல் மீது கடந்த 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காஸா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், இந்தத் தாக்குதலில் 18ஆயிரம் வரையான அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காஸாவில் காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிக்க வாருங்கள்!

## காஸா சுகாதார துறை அழைப்பு

காஸா, டிசெ. 13

உலகம் முழுவதுமிருக்கும் மருத்துவ குழுக்கள் உடனடியாக காஸாவுக்கு விரைந்து வந்து, சிகிச்சைக்காக காத்திருப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்று காஸா சுகாதார துறை அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து காஸா சுகாதார துறை அமைச்சின் செய்தி தொடர்பாளர் கூறுகையில்,

உலகம் முழுவதுமிருக்கும் மருத்துவ குழுக்கள் உடனடியாக காஸாவுக்கு விரைந்து வந்து சிகிச்சைக்காக காத்திருப்பர்களுக்கு உதவ வேண்டும். நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற காஸாவிலிருந்து வெளியேற தயாராக இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காஸா பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் மட்டும் 297 பேர் உயிரிழந்தனர். 550இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இத்துடன், கடந்த சில வாரங்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 997-ஆக அதிகரித்துள்ளது. இது தவிர, இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 49 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் - என்றார்.

இதேவேளை, கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலில் 104 படையினர் உயிரிழந்தனர். 582 படையினர் காயமடைந்தனர். 7ஆம் திகதிக்கு பின்னர் 433 படையினர் உயிரிழந்தனர். ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ட்ரம்ப் முன்னிலை

வாஷிங்டன், டிசெ. 13

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. இதில் முன்னாள் ஜனாதிபதியும் குடியரசு கட்சியை சேர்ந்தவருமான டொனால்ட் ட்ரம்ப், தாம் மீண்டும் போட்டியிடவுள்ளார் என்று அறிவித்தார். இதற்காக குடியரசு கட்சி வேட்பாளரை தெரிவு செய்யும் போட்டியில் ட்ரம்ப் தனக்கான ஆதரவை திரட்ட தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளராக குடியரசு கட்சியில் யாருக்கு அதிக ஆதரவு இருப்பது தொடர்பாக தனியார் நிறுவனம் கருத்து கணிப்பு நடத்தியது. மாகாண வாரியாக நடத்தப்பட்ட கருத்து கணிப்பில் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை வகிக்கிறார். அவருக்கு 61 சதவீத குடியரசு கட்சியினர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ட்ரம்ப் மீது பாராளுமன்ற வன்முறை வழக்கு உள்பட பல்வேறு வழக்கு விசாரணை நீதிமன்றில் நடந்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் இலட்சக்கணக்கில் இறந்து ஒதுங்கும் மீன்கள்!



ரோக்கியோ, டிசெ. 13

ஜப்பானுக்கு சொந்தமான ஹகோடேட் தீவு பிரபல சுற்றுலா தலமாக விளங்குகிறது. இங்கு திடீரென ஏராளமான மீன்கள் செத்து கரை ஒதுங்கின.

இதனையறிந்த மக்கள் அந்த மீன்களை சேகரித்து விற்பனை செய்ய தொடங்கினர். ஆனால், நேரம் செல்லச்செல்ல இலட்சக்கணக்கான மீன்கள் செத்து மிதந்தன. எனவே புகுஷிமா அணுமின் நிலையத்தின் கதிரியக்க கழிவுகள் கலந்ததால் மீன்கள் இறந்தன என்று கூறப்பட்டது. இதனால் அந்த மீன்களை சாப்பிட வேண்டாம் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இதற்கிடையே மீன்கள் இறந்தது குறித்து விசாரணை நடத்துவதற்காக அங்கு ஆராய்ச்சியாளர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் அங்கிருந்து மாதிரிகளை சேகரித்து சென்றுள்ளனர். அதன் முடிவு வெளிவந்த பின்னரே மீன்கள் இறந்ததற்கான உண்மையான காரணம் தெரிய வரும் என அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# பாகிஸ்தனில் தற்கொலை தாக்குதல் 23 இராணுவத்தினர் உயிரிழந்தனர்!

லாகூர், டிசெ. 13

பாகிஸ்தானின் இராணுவ தளத்தில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம் டிரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் இராணுவ தளம் உள்ளது. இது ஆப்கானிஸ்தான் எல்லை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

இந்நிலையில், இந்த இராணுவ தளத்தில் நேற்று அதிகாலை தற்கொலை படை தாக்குதல் நடத்தப்பட்டது. அதிகாலை நடந்த இந்த தற்கொலைப்படை தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து, படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இந்த தற்கொலைப் படை தாக்குதலுக்கு பாகிஸ்தானின் தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (ஐ)



# சிக்கிம் மாநிலத்துக்கு சென்றார் தலாய் லாமா

புதுடில்லி, டிசெ. 13

திபெத் புத்த மதத் தலைவரான தலாய் லாமா 13 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று முன்தினம் சிக்கிம் மாநிலத்துக்கு வருகை புரிந்தார். அவரை அம்மாநில முதல்வர் பிரேம் சிங் தமாங் வரவேற்றார்.

திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமா மூன்று நாள் பயணமாக சிக்கிம் மாநிலத்துக்கு நேற்று முன்தினம் காலை வருகை புரிந்துள்ளார். அவரை அம்மாநில முதல்வர் பிரேம் சிங் தமாங் (சேநअ ஞைபொ வுயஅயபெ) வரவேற்றார். அதோடு, பல்வேறு புத்த மத துறவிகள், அவருக்குப் புத்த மத வழக்கப்படி ஷெர்பாங் பாடலைப் பாடி, நடனமாடிச் சிறப்பாக வரவேற்பு கொடுத்தனர். தலாய் லாமா, தற்போது காங்டாக்கில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு சென்றுள்ளார்.



அங்கு அவரைக் காண நெடுஞ்சாலையின் இருபுறமும் நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

87 வயதான தலாய் லாமா இந்தியா மற்றும் சீன எல்லையிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பால்ஜோர் மைதானத்தில் போதனை செய்யவுள்ளார். தலாய் லாமாவிடம் ஆசி பெற இந்நிகழ்ச்சியில் சுமார் 40 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று கூறப்படுகிறது. தலாய் லாமா கடைசியாக 2010-ல் சிக்கிம் மாநிலத்துக்குச் சென்றிருந்தார். தற்போது அவர் காங்டாக் மாவட்டத்தில் உள்ள சிம்பிக் காம்டாங் தொகுதியில் கர்மபா பார்க் திட்டத்தின் அடிக்கல்லை நாட்டுவார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங் இது குறித்து எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில், "தலாய் லாமாவுக்கு என்னுடைய அன்பான வரவேற்பு வழங்கி, மரியாதை செலுத்தியதைப் பாக்கியமாகக் கருதுகிறேன். அவருடைய ஆழ்ந்த போதனைகள் மற்றும் முன்மாதிரியான வழிகாட்டுதல்கள் நம் இதயத்தையும், மனதையும் வளப்படுத்துகிறது. ஆசீர்வதிக்கப்பட்ட சிக்கிம் பூமிக்கு, அவரை வரவேற்கிறோம்" என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# உணவின்றி இருப்பவர்களிடம் வரியை வசூலிக்கவேண்டாம்!

## சபையில் எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு, டிசெ. 13

**உணவின்றி இருப்பவர்களிடம் இருந்து வரியை அறவிடுவதற்கு பதிலாக வரி செலுத்தக்கூடியவர்களிடம் இருந்து வரியை அறவிடவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன, அரச வருவாய் அவசியம் என்றாலும் பணவீக்கச் சுமையை சாதாரண மக்களே எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டினார்.

எனவே அரச வருமானம் 45 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அதில் 56 வீதமான வருமானத்தை வட்வரி மூலம் பெற வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் அவசியம் என்றபோதும் வட்வரி சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு கருத்து தெரிவிக்க அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார். (அ)



# புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன சில வீடுகள்!



கிளிநொச்சி, டிசெ. 13

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் சில வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுண்டிக்குளம் சந்தியூடாக கல்லாறு மற்றும் சுண்டிக்குளம் கடற்கரை செல்லும் பிரதான வீதியை குறுக்கறுத்து வெள்ளநீர் பாய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அதே பகுதியில் உள்ள சில வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்ததன் காரணமாக மக்கள் அயலவர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்செல்ல மறுத்த பொலிஸ் உத்தியோகத்தரின் மீது தாக்குதல்!

கொழும்பு, டிசெ. 13

ஆடியகம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்ல மறுத்த பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த தாக்குதல் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளானவர் குருநாகல் - ரஸ்நாயக்க பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராவார்.

இவர் கடமை முடிந்து வீடு சென்று கொண்டிருக்கும் போது வழியில் வந்த சந்தேக நபர் தன்னை மோட்டார் சைக்கிளில் ஏற்றி போகும் வழியில் இறக்கி விடுமாறு கேட்டுள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்செல்ல மறுத்ததால் குறித்த சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியுள்ளார்.

காயமடைந்தவர் நிக்கவெரட்டிய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இரு நாட்களில் 4 சிறுவர் உட்பட 12 பேர் காணாமல் போயுள்ளனர்

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் கடந்த இரு நாட்களில் 4 சிறுவர்கள் உள்ளிட்ட 12 பேர் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பொரலஸ்கமுவ-வெரஹெர பிரதேசத்தில் வசிக்கும் 15 வயது சிறுவனும், கிளிநொச்சி-தர்மபுரம் பகுதியில் வசிக்கும் 16 வயது சிறுவனும், ஹற்றன்-பொல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய சிறுமியும், யடியன தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட 15 வயதுடைய சிறுமி ஒருவரும் என 4 பேர் காணாமல்போன சிறுவர்களில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், காணாமல் போனவர்களில் நுவரெலியாவைச் சேர்ந்த 18 வயது யுவதியும், பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய பெண்ணும், எடரமுல்லை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரும் அடங்குவதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு, நோர்வூட்டைச் சேர்ந்த 82 வயதான பெண்ணும், மொறட்டுவையைச் சேர்ந்த 75 வயதுடைய ஆணும், பள்ளம பிரதேசத்தை சேர்ந்த 70 வயதான தொழிலாளி மற்றும் கஹதுடுவ பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடைய ஆண் ஒருவரும் காணாமல் போனவர்களில் அடங்குவதாவும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

அதற்கிணங்க, கடந்த இரண்டு தினங்களில் மட்டும் நாட்டில் 12 பேர் காணாமற் போயுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மட்டக்களப்பில் இராணுவத்தினரின் முகாம்களை உடனே அகற்றுங்கள்!

## சபையில் சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 13

மட்டக்களப்பிலுள்ள இராணுவ முகாங்களை அகற்றுமாறு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரே! குருக்கள்மட இராணுவ முகாம் பற்றி நாம் மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடி அதில் ஓர் பகுதி அளவில் விட்டுத் தருவதாக உறுதி அளித்துள்ளார்கள். அதனை நீங்கள் துரிதப்படுத்தி தரவேண்டும் .

அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் காயன்கேணி பிரதேசத்தில் புதிதாக ஓர் காணியை இராணுவம் தன் வசப்படுத்தும் திட்டம் உள்ளதாக அறிந்தோம். அதே போல் பாலையடி வெட்டை இராணுவ முகாமில் ஓர் பகுதியை அவ் ஊர் மக்கள் மலசல கூடம் அமைப்பதற்காக கேட்கின்றார்கள்.

இவற்றினையும் கருத்தில் கொண்டு இவற்றுக்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மட்டக்களப்பில் இவ்வாறாக பல காணிகள் காணப்படுகின்றன. இவற்றினை விடுவிக்க ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகள் முன்வைத்துள்ளேன். அவற்றை உங்களிடமும் முன்வைக்கின்றேன்- என்றார். (அ)

# வற் வரிக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, டிசெ. 13

திருத்தியமைக்கப்பட்ட பெறுமதி சேர் வரிச் சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வரைவாளர்களால் திருத்தப்பட்ட பெறுமதி சேர் வரிச் சட்டத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தை திருத்துவதற்கு ஒக்ரோபர் 30 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சர்கள் குழு கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதன்படி, 2024 ஜனவரி முதல், வரிக்கு உட்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பை வருடத்திற்கு 80 மில்லியன் ரூபாயிலிருந்து 60 மில்லியன் ரூபாயாகக் குறைப்பதற்காக வரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

திருத்தச் சட்டத்தின் மூலம் பெறுமதி சேர் வரியை 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டது. (அ)

# கிளிநொச்சி விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

கிளிநொச்சி, டிசெ. 13

கிளிநொச்சி,கல்மடுநகர் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தருமபுரம் பகுதியில் இருந்து இராமநாதபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும், இராமநாதபுரம் பகுதியில் இருந்து தருமபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் படுகாயம் அடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நாட்டில் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் அதிகளவான உயிரிழப்புகள் 2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2010 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தில் 130,337 பதிவாகியிருந்த உயிரிழப்புகள் 2022 ஆம் ஆண்டில் 179,792 ஆக அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி. அனுரகுமார தெரிவித்தார்.

அத்துடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் 633,303 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் மாத்திரம் 852,652 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டின் உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படும் என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி. அனுரகுமார மேலும் தெரிவித்தார். (அ)



## பட்ஜெட்...

ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட ஆளும் கட்சியினர் ஆதரவாக வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, டலஸ் அணி, விமல் அணி என்பன எதிராக வாக்களித்தன.

நவம்பர் 22 ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் நடைபெற்றது. இந்நிலையில் இன்று புதன்கிழமை பட்ஜெட் மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். (அ)

## இலங்கை...

இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலை உயர்வு எமது கடற்றொழிலாளர்களின் தொழிலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பிரதான விடயமாக உள்ளது. பல்வேறு காரணங்களால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது இலங்கையிலும் அதன் விலைகள் அதிகரிக்கின்றன. இதற்கு அரசாங்கத்தைக் குறை கூறமுடியாது. கிடைக்கும் அனைத்து சந்தர்ப்பங்களையும் செயற்திறன் மிக்க வகையில் பயன்படுத்தி இந்நாட்டின் கடற்றொழில் துறையை முன்னேற்றும் வகையிலேயெ எமது திட்டங்களை வகுத்து செயற்படுகின்றோம். எரிபொருள் செலவு போன்ற உற்பத்திச் செலவுகளைக் குறைக்க பல்வேறு மாற்று வழிமுறைகளை பயன்படுத்தவும் திட்டமிட்டு வருகின்றோம்.

அந்த வகையில், படகுகளில் பற்றரி மோட்டர் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்தும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். இது மீனவர்களின் உற்பத்திச் செலவைக் குறைப்பதுடன் எரிபொருள் பிரச்சினைக்கும் தீர்வாக அமையும். அது தொடர்பில் பரீட்சார்த்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளோம்.

அதேபோன்று கடற்றொழில் சட்டத்தைப் பொருத்தவரை எமது அமைச்சு திருத்தப்பட்ட புதிய கடற்றொழில் சட்டமொன்றை தயாரித்து வருகின்றது. அது தற்போது சட்ட வரைவு என்ற நிலையிலேயே உள்ளது. ஆனால் இதனைப் பற்றி சரியாக விளங்கிக் கொள்ளாமலும் உள்நோக்கத்திலும் பலர் தவறான கருத்துகளைக் கூற முற்படுகின்றார்கள். இது ஒரு வரைபே அன்றி முடிவல்ல. துறைசார் நிபுணர்களின் கருத்துகளையும் பெற்றே இதனை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடல் பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரச்னையைப் பொறுத்தவரை, அது இரு நாடுகளுக்கும் இடையிலான விடயம் என்பதால் இராஜதந்திர ரீதியிலேயே அதனை அணுக வேண்டியுள்ளது. இந்திய அரசியலமைப்பின் பிரகாரம் மீன்படி விடயம் மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. எனவே அது தொடர்பில் வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நேரடியாக இந்தியாவுக்கே சென்று பாண்டிச்சேரி மற்றும் தமிழ் நாட்டு அரசு உட்பட இந்திய ஊடகங்களுடன் கலந்தரையாடுவதே சிறந்த தீர்வாக அமையும் என்பதே எனது நிலைப்பாடாகும்-என்றார்.

## பாராளுமன்ற...

எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகித்த ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஆளும் கட்சியுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று கட்சி உறுப்புரிமையை இழந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானிய பாராளுமன்ற மரபுப்படி, பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே தெளிவான பிளவு இருக்க வேண்டும். ஒரு கட்சியின் உறுப்பினரை வெளியேற்றும் முடிவு எடுக்கப்பட்ட பிறகு, அது இறுதி முடிவாகும்.

இவ்வாறான தீர்மானங்களை எடுப்பதற்காக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆளுங்கட்சியில் இணைந்ததன் மூலம், மனுதாரர்கள் கட்சி உறுப்புரிமையை இழந்துள்ளனர்.

இவர்களை ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் சட்டபூர்வமானது எனவும் அவர்களின் மனுக்களை தள்ளுபடி செய்யுமாறும் அவர் நீதிமன்றத்தை கோரினார். இதனையடுத்து மனு மீதான விசாரணையை நாளை உயர் நீதிமன்ற அமர்வு ஒத்திவைத்துள்ளது. (அ)

## உலகத் தமிழர்...

ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக தமிழர் பேரவையின் இமாலய திட்ட செயல்பாட்டை கடந்த காலங்களில் முயற்சித்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். நாம் வெளிப்படையாக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் யுத்தத்தை கைவிட்டு பேச்சுக்கு வருமாறு இரு தரப்புக்கும் கோரிக்கை விடுத்திருந்தோம்.

அப்போது உலகத் தமிழர் பேரவையினர் என்ன செய்தனர் என்பதனை இன்று சுயவிமர்சனம் செய்ய வேண்டும்.

கடந்த காலங்களில் இதேபோல் தங்களது பங்களிப்பினை இலங்கைக்கு வழங்கியிருந்தால் 30 வருட யுத்தத்தை தடுத்து நிறுத்த அழுத்தத்தையாவது கொடுத்திருக்கலாம். இருப்பினும் காலம் கடந்த பின்னராவது தாயகத்திற்கு திரும்பி இவ்வாறு அக்கறையுடன் செயல்படுவது மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்வாறு சர்வதேச புலம்பெயர் அமைப்புகள் எமது நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபட வேண்டும். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். சந்தரப்பம் வழங்கப்படும் பட்சத்தில் ஜனநாயக தேர்தல் அரசியல் நீரோட்டத்திலும் பங்காற்ற வேண்டும்.

இனப் பிரச்னைக்கான தீர்வை தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகத்தான் அணுக வேண்டும் என்பதை உலக தமிழர் பேரவையின் நகர்வும் எடுத்துக்காட்டியுள்ளது. எம்மிடம் அரசியல் பிரதிநிதித்துவப் பலம் போதியளவில் இல்லை. அது மற்றவர்களிடம் உள்ளது.

ஆகவே, தேசிய நல்லிணக்கம் உள்ளவர்களிடம் அரசியல் பலமும் இருந்தால் பல விடயங்களை சாதித்திருக்கலாம். எதிர்ப்பு அரசியலால் எதையும் சாதிக்க முடிந்ததா? எனவேதான் தேசிய நல்லிணக்கமுள்ளவர்களிடம் அரசியல் பலம் வேண்டும்-என்றார். (அ)

## ஆணுறைக்கு...

தொழில்நுட்ப அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்களின் ஒதுக்கீடு மீதான விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து எதிர்வரும் முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி அறவிடப்படும் பொருட்களின் பட்டியல் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவினால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் சமையல் எரிவாயு, பெற்றோல், டீசல் உள்ளிட்டவைகளும், இரசாயன உரங்களையும் இந்த பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பெறுமதி சேர் வரிக்கு உட்பட்ட பொருட்கள் குறித்து நளின் பண்டார பாராளுமன்றில் நேற்று கருத்து வெளியிட்டார்.

“ஆணுறைகளுக்கு பெறுமதி சேர் வரி விதிப்பது நல்ல விடயமாகும்.

சனத்தொகை பெருக்கத்தின் ஊடாக மனித வளத்தை அபிவிருத்தி செய்து நாட்டை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய முடியும்.

எமது நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சி சிறிது மந்தமாகவே காணப்படுகின்றது. இப்போது மருந்துப் பொருட்களை வாங்கும்போது, வற் வரி வசூலிக்கப்படுகிறது.

பெனாடோலுக்கும் வற் வரி அறவிடப்படும். வற் வரி அதிகரிப்பானது ஆணுறை வாங்குவதையும் பாதிக்கின்றது.

எவ்வாறாயினும், ஆணுறை உபயோகத்தை குறைப்பது ஒருபுறம் நல்ல விடயமாகும். இதன் மூலம் நாட்டில் சனத்தொகை அதிகரிக்கும்.

சனத்தொகை பெருக்கத்தின் ஊடாக குறைந்த பட்சம் எமது நாட்டின் மனித வளத்தையாவது அதிகரித்து எதிர்காலத்தில் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

வற் வரி அதிகரிப்பு ஒரு விடயத்திற்கு மட்டுமே நல்லது. இதன்படி, ஆணுறை மீதான வற் வரி அதிகரிப்பு தொடர்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்ற்- என்றார் நளின் பண்டார. (அ)

## பெருந்தோட்ட...

திணைக்களத்தின் இன சமத்துவம் மற்றும் நீதிக்கான விசேட பிரதிநிதியான டிசைரீ கோர்மியர் ஸ்மித், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானை நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

கொழும்பு, கொள்ளுபிட்டியில் உள்ள அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்க பிரதிநிதியிடம் ஜீவன் தொண்டமான் எடுத்துரைத்ததுடன், மலையக மக்களுக்கும் சமூக நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக தொடர்ச்சியாக குரல் எழுப்பிவரும் சர்வதேச சமூகத்துக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

அத்துடன், மலையக பெருந்தோட்ட தொழிலாளர் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகவும், மலையக மக்களுக்கு உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் பற்றி அமைச்சரிடம், அமெரிக்க பிரதிநிதி கேட்டறிந்துகொண்டார். அமைச்சின் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கருத்துகளை அறிந்து கொண்டார். (அ)

## சிங்கப்பூர்...

ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்திலேயே அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஓகஸ்ட் மாதம் சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தில் இருநாட்டு இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பரந்தப்பட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அத்துடன், சிங்கப்பூருடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் சில உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டிருந்தன. (அ)

## யாழில்...

பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஐந்து பவுண் பொற்காசு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரே கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## யாழ்ப்பாண...

சன் லிமிட்டெட் என்ற கம்பனிக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி பூநகரி குளத்திலிருந்து 700 மெகாவொட் சூரிய மின்சக்தி உற்பத்தியை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மின்உற்பத்தியை மேற்கொண்டு நமக்கு மின்சாரம் வழங்குவதற்காக நாம் மின்சார கொள்முதல் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை நாம் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக ஒரு அலகு மின்சாரத்தின் பெறுமதி 50 ரூபாவாகும். சூரிய மின் உற்பத்தி நாட்டில் அதிகாரித்தால் மின்சார கட்டணங்கள் குறைவடையும் என்ற பாரிய எதிர்பார்ப்பு ஒன்று நம் நாட்டு மக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே இது தொடர்பில் தெளிவுப்படுத்துங்கள். அதேநேரம் இவற்றுக்கு வெளிப்படையான விலைமனுக்கோரல்கள் முன்வைக்கப்படுவதில்லை. அனைத்தும் மறைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# பூநகரி குளத்தின் மேற்பரப்பில் பாரிய சூரிய மின்சக்தி திட்டம்!

கொழும்பு, டிசெ. 13

**கிளிநொச்சி-பூநகரி குளத்தின் மேற்பரப்பில் சூரிய மின்சக்தி திட்டத்தை நிறுவுவதற்காக அவுஸ்திரே லியாவுடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தை எட்டு வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தமது எக்ஸ் தளத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, ஆயிரத்து 500 மெகாவோட் ஆற்றல் சேமிப்பு அமைப்புடனான 700 மெகா வோட் சூரிய மின்சக்தி திட்டத்தில் முதலீடு செய்வதற்காக அவுஸ்திரேலியாவின் யுனை டெட் சோலார் குழுமத்துடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவுள்ளது.

ஆயிரத்து 727 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் இந்த சூரிய மின்சக்தி திட்டம் நிறுவப்பட வுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறினார். (அ)

# அரிசி விலை உயர்வு



கொழும்பு, டிசெ. 13

அரிசி விநியோகஸ்தர்கள் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை 30 ரூபாவினால் அதிகரித் துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கையின் பிரதான அரிசி நிறுவனம் ஒன்று கிலோ ஒன்றுக்கு 230 ரூபாவாக இருந்த சம்பா அரிசியின் விலையை 260 ரூபாவாக உயர்த்தியுள் ளதாக நுகர்வோர் சுட்டிக்காட்டினர்.

ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை மற்று மொரு நிறுவனம் 245 ரூபாவாக அதிகரித்துள்ள தாக நுகர்வோர் தெரிவித்தனர்.

இந்த நிறுவனங்களுக்கு இஷ்டம்போல் விலையை உயர்த்த வாய்ப்பு அளிக்கப்பட்டால், பண்டிகைக் காலம் முடிவடைவதற்குள் சம்பா அரிசியின் விலை கிலோ 300 ரூபாவுக்கு அருகில் இருக்கும் என நுகர்வோர் தெரிவித்தனர். (அ)

# கோழி இறைச்சி விலை உயர்வு

கொழும்பு, டிசெ. 13

இலங்கையில் சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை நேற்று முதல் அதிகரிக்க மொத்த வியாபாரிகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் ஒரு கிலோ கோழி இறைச்சி 30 முதல் 50 ரூபாயால் அதிகரிக்கப்பட உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

எனவே, 1,200 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கோழி இறைச்சி நேற்று முதல் 1,250 ரூபாய்க்கு உயர்வடைந்தது என தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் பல கோழிப் பண்ணை உரிமை யாளர்கள் இந்த தொகையை நேற்று முன்தினம் அதிகரித்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித் தனர்.

இதனிடையே முட்டையின் விலையும் 60 ரூபா யாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், சில இடங்களில் அதற்கு மேலதிகமாக விற்பனை செய்யப்படுகின் றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பாடசாலை விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு ரூ.1500 மில்.

கொழும்பு, டிசெ. 13

ஒவ்வொரு விளையாட்டுக்களிலும் தமது திறமையை வெளிப்படுத்தி வரும் பாடசாலைகளை விளையாட்டுத்துறை பாடசாலைகளாக நியமித்து, அவற்றை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி வேளையில் பிரேம்நாத் சீ தொலவத்த எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலை விளையாட்டுத்துறை அபிவிருத் திக்காக 1500 மில்லியன் ரூபா அடுத்த வருடத்துக் காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை கிராமிய ரீதியில் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும்.

அதேவேளை விளையாட்டுக்களில் திறமையை வெளிப்படுத்தாத பாடசாலைகளை விளையாட் டுத்துறை பாடசாலைகளாக பெயரிடுவது பொருத்தமற்றது.

தற்போதைய விளையாட்டு பாடசாலை திட்டம் தோல்வியடைந்துள்ளது. வலல ஏ ரத்னாயக்க பாடசாலை விளையாட்டுப் பாடசாலை அல்ல. எனினும் அதில் சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ளார்கள். அவர்கள் சர்வதேச ரீதியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்-என்றார். (அ)

# மின்வெட்டு குறித்த அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை!

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 13

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பிலான முழுமையான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுமென எதிர்பார்ப்பதாக ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர், மின்சார சபையின் உயரதிகாரிகளை ஆணைக்குழு முன்னிலையில் அழைத்து காரணங்களைக் கேட்டறிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பில் ஆராய வெளியகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மின்வெட்டு தொடர்பிலான விசார ணைகளுக்காக அரச புலனாய்வு சேவைப் பிரிவின் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மாலை 05.10 அளவில் நாடளாவிய ரீதியில் மின்வெட்டு ஏற்பட்டது. சுமார் ஐந்தரை மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் மின்விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வர முடிந்ததாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

கொத்மலை - பியகம மின்விநியோக கட்ட மைப்பில் மின்னல் தாக்கமே மின்வெட்டு ஏற்படக் காரணம் என மின்சார சபை பின்னர் தெரிவித்தி ருந்தது. (அ)

# பிரான்ஸ் நாட்டில் திருவள்ளுவர் சிலை



பாரிஸ், டிசெ. 13

பிரான்ஸ் நாட்டில் சேர்ஜி நகரில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வினை பிரான்ஸ் வொறியல் தமிழ் கலாசார மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இந்தியா, புதுச்சேரி பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணனும் இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் கலந்து கொண்டனர்.

விழாவில் நகைச்சுவை நாவரசர் புலவர் மா.ராம லிங்கம், கவிஞர், எழுத்தாளர், பட்டிமன்ற பேச் சாளர் திருமதி கவிதா ஜவஹர் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். (அ)

# பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைதான அஹ்னாப் ஜஸீம் வழக்கிலிருந்து விடுதலை!

கொழும்பு, டிசெ. 13

தன்னிடம் கற்ற மாணவர்களுக்கு தீவிரவாதத்தை போதித்ததாக கூறி கைது செய்யப்பட்ட இளம் கவிஞர் அஹ்னாப் ஜஸீமை அனைத்து குற்றச்சாட் டுகளில் இருந்து விடுதலை செய்து புத்தளம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டமா அதிபர் முன்வைத்த சாட்சியங்கள் ஊடாக அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியாது போயிருப் பதாக கூறி புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்னா சுவந்துருகொட இந்த தீர்ப்பை அளித்தார்.

'நவரசம்' என்ற கவிதைத் தொகுப்பு புத்தகத்தை எழுதியமைக்காக கைது செய்யப்பட்டு, பின்னர் அடிப்படைவாதத்தை போதனை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு அஹ்னாப் ஜஸீம் எனும் இளம் கவிஞர் கைதுசெய்யப்பட்டார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர், அஹ்னாப் ஜஸீம் மாணவர்களுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன், நளீமியா கலாபீடத்தின் அஷ்ஷெய்க் அகார் முஹம்மது ஆகியோரின் உரைகளைக் காட்டி, அடிப்படைவாதத்தை தூண்டி, பிற மதத்தவர்கள் மீது பகைமை உணர்வை தூண்டிய தாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

புத்தளம் மேல் நீதிமன்றில் நீதிபதி நதீ அபர்னா சுவந்துருகொட முன்னிலையில் இந்த வழங்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையிலேயே நேற்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 மே 16 ஆம் திகதி இரவு 8 மணிய ளவில், சிலாவத்துறை, பண்டாரவெளியில் அமைந்துள்ள வீட்டில் வைத்து அஹ்னாப் ஜஸீம் கைது செய்யப்பட்டிருந்தார்.

முதலில் கோட்டை நீதிமன்றில் உள்ள பீ 13101/19 வழக்கு தொடர்பில் அஹ்னாப் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டாலும், கடந்த 2021 மார்ச் 3 ஆம் திகதி பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் கோட்டை நீதிமன்றின் குறித்த வழக் கில் அஹ்னாப் சந்தேக நபரில்லை என நீதிமன்றில் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே அவருக்கு எதிராக கொழும்பு 8 ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றில் பீ. 44230/20 எனும் இலக்கத்தின் கீழ் விசாரணை தகவல்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பின்னர் அதனை மையப்படுத்தி சட்ட மா அதிபர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 2 (1) ஏ பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றினை புரிந்துள் ளதாக கூறி புத்தளம் மேல் நீதிமன்றில் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பருவநிலை பாதுகாப்பு சவால்!; கோப் -28 மாநாடு!!



2015-ஆம் ஆண்டு பாரிஸ் பருவநிலை மாநாட்டு ஒப்பந்தத்தில் உலக நாடுகள் கையொப்பமிட்டன. இந்த ஒப்பந் தத்தின் கீழ் 2050-ஆம் ஆண்டுக்குள் உலக நாடுகள் தங்க ளது நிகர எரிபொருள் உமிழ்வுகளை பூஜ்ஜியம் அளவுக்குக் கொண்டுவருவதை நோக்கிச் செயல்பட வேண்டும். அதற்கேற்ப கரியமிலவாயு வெளியேற்றத்தை பெருமள வில் உலக நாடுகள் குறைக்க வேண்டியிருக்கும்.

பருவநிலை மாற்றம்தான் பெரும்பாலான இயற்கைச் சீற்றங்களுக்குக் காரணம் என அனைத்து நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன. ஆனால், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் வளரும் நாடுகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுவதில்லை என்கிற குற்றச்சாட்டு காலம்காலமாகத் தொடர்ந்து வருகிறது.

ஐக்கிய அரபு அமீரகம் தலைமையில் துபையில் நடைபெற்று வரும் பருவநிலை பாதுகாப்பு நாடுகள் கூட்டமைப்பு மாநாட்டின் முக்கிய அங்கமாக உலகப் பருவநிலை பாதுகாப்புத் திட்ட மாநாட்டில் (கோப்-28) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உரை, வளரும் நாடுகளின் குரலாக எதிரொலித்தது. ‘உலகளாவிய கார்பன் பட்ஜெட்டில், அனைத்து வளர்ந்து வரும் நாடுகளுக்கும் நியாயமான பங்கை வழங்க வேண்டும் வளர்ந்து வரும் நாடுகள் பருவநிலை மாற்ற சவால்களைத் திறம்பட எதிர்கொள்ளும் வகையில், தொழில்நுட்பங்களை வளர்ந்த நாடுகள் பகிர்ந்துகொள்ள வேண்டும்’ என்பதுதான் பிரதமர் மோடி முன்வைத்த முக்கியமான வேண்டுகோள்.

‘வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இரண்டிலும் சமரசம் செய்துகொண்டால் ஏதாவது ஒன்று மிகுந்த பாதிப்பை எதிர்கொள்ளும். அந்த வகையில், இரண்டுக்கும் இடையே சமநிலையை உருவாக்குவதில் இந்தியா உலகுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது’ என்றும் மாநாட்டில் பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்தார்.

தொழிற்புரட்சி காலத்துக்கு முன்பு இருந்த வெப்பநிலையைவிட 1.5 டிகிரி செல்சியஸுக்குக் குறைவாக புவி வெப்பமயமாத லைக் கட்டுப்படுத்த வேண்டும் என 

நிலக்கரி மூலம் எரிபொருள் உற்பத்தி செய்யப்படுவ தால்தான் பெருமளவில் கரியமிலவாயு வெளியேறுகி றது. ஆனால், நிலக்கரிப் பயன்பாட்டைக் குறைக்க வேண்டுமானால் அதற்கு மாற்றாக புதுப்பிக்கத்தக்க எரிபொருள் உற்பத்திக்கு கூடுதல் நிதியும், தொழில்நுட்ப உதவிகளும் தேவைப்படும். அந்த வகையில், உலக அளவில் கரியமிலவாயு பயன்பாட்டுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியில் 80 சதவீதத்துக்கும் அதிகமான பலனை வளர்ந்த நாடுகள் ஏற்கெனவே அனுபவித்துவிட்டன. இதனால், வளர்ந்து வரும் மற்றும் ஏழை நாடுகளுக்கு மிகக் குறைந்த கார்பன் பயன்பாட்டுக்கான வாய்ப்பே உள்ளது என்பதே இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் வாதம்.

உலக மக்கள்தொகையில் 17 சதவீதத்தைக் கொண்டுள்ள இந்தியாவின் கரியமிலவாயு வெளியேற்றத்தின் பங்கு என்பது உலக அளவில் 4 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. மேலும், தேசிய அளவில், வரும் 2030-க்குள் கரியமிலவாயு உமிழ்வின் தீவிரத்தை 45 சதவீதமாகக் குறைக்கவும், புதைபடிமமற்ற எரிபொருள்களின் பங்கை 50 சதவீதமாக அதிகரிக்கவும் இந்தியா இலக்கு நிர்ணயித்துச் செயல்பட்டு வருகிறது.

பெட்ரோல், டீசல் வாகனங்களைவிட மின் வாகனங்களுக்கு அதிக வரிச் சலுகைகள், மின் வாகனப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் அதிக அளவில் மின்னேற்றி மையங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள், பொதுப் பயன்பாட்டை அதிகப்படுத்த பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் விழிப்புணர்வு,



15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாகனங்களின் பயன்பாட்டில் கட்டுப்பாடு என இந்தியா தனது இலக்கை நோக்கி அபாரமாகச் செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில் துபை பருவநிலை பாதுகாப்பு மாநாட்டில் இது தொடர்பான பல்வேறு விஷயங்கள் இதுவரை விவாதிக்கப்பட்டுள்ளன. புதைபடிம எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பது, பருவநிலை தாக்கத்தை எதிர்கொள்ளும் தன்மையை உருவாக்குதல், பருவநிலை பேரழிவை எதிர்கொள்ள அதிகம் பாதிப்புக்குள்ளாகும் நாடுகளுக்கு நிதியுதவி ஆகியவை இதில் முக்கியமானவை.

பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு ஆதரவளிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இழப்பு மற்றும் சேத நிதியத்தை புத்துயிர்ப்புடன் செயல்படுத்த இந்த மாநாட்டின் முதல் நாளிலேயே முடிவு செய்யப்பட்டது. அதன்படி, இதற்காக தாராளமாக நிதி அளிப்பதாக பல்வேறு நாடுகள் உறுதியளித்தன. பருவநிலை மாற்றத்தின் மோசமான தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில் உலக சுகாதார அமைப்புகளை மேம்படுத்த உறுதியேற்கப்பட்டது. குளிரூட்டல் தொடர்பான உமிழ்வைக் கட்டுப்படுத்தும் திட்டத்தில் மேலும் 60 நாடுகள் இணைந்துள்ளன.

நேற்று வரை நடைபெறவிருந்த டுபாய் பருவநிலை பாதுகாப்பு மாநாட்டில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக வளரும் நாடுகளுக்கு நிதியுதவி, தொழில்நுட்ப உதவிகளை அளிப்பது, எந்தக் கால இடைவெளியில் எவ்வளவு நிதியுதவி அளிப்பது போன்ற முடிவுகள் எட்டப்படக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

பருவநிலை பாதுகாப்பு தொடர்பாக இதுவரையில் நடந்துள்ள மாநாடுகள், கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்று பார்த்தால் அதில் ஏமாற்றமே எஞ்சியுள்ளது. மாநாட்டின் போது தீர்மானங்களுக்கு ஏகமனதாக ஆதரவு அளிக்கும் வளர்ந்த நாடுகள் அதை நிறைவேற்றுவதற்கு அக்கறை காட்டாததுதான் இதற்குக் காரணம்.

டுபாய் மாநாட்டின்போது, ‘2028-ஆம் ஆண்டில் ஐ.நா. பருவநிலை மாநாடு அல்லது ‘கோப் - 33’ என்ற பருவநிலை பாதுகாப்பு மாநாட்டை இந்தியாவில் நடத்துவதற்கு பிரதமர் நரேந்திர மோடி ஆர்வம் தெரிவித்தது பருவநிலை பாதுகாப்பு சவாலை எதிர்கொள்வதற்கு இந்தியா எந்த அளவுக்கு உண்மையாக உள்ளது என்பதன் வெளிப்பாடு.

(தினமணி)


# “ரைம்” சஞ்சிகையில் நூற்றிலொருவர் சஞ்சயன்!

முனைவர் எம்.சஞ்சயன் ‘சர்வதேசப் பேணுப்படுதல்’ (**Conservation International**) என்னும் அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி. அமெரிக்காவில் வசிப்பவர். “பேணப்படுதள்” துறையில் அறிவியல் அறிஞரான இவர் எழுத்தாளரும் கூட. தொலைக்காட்சிகளில் இத்துறையில் செயற்படும் இவர் இயற்கையைப் பேணுவதன் மூலம் மானுடரின் வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்று செயற்படுபவர். இவரது கட்டுரைகள் **Science, Nature & Conservation Biology** போன்ற இதழ்களில் வெளியாகியுள்ளன. இவரது இயற்கையைப் பேணுதல் பற்றிய செயற்பாடுகளுக்காகவும், எழுத்துகளுக்காகவும் சர்வதேச ஊடகங்கள் பலவற்றின் கவனத்தை ஈர்த்திருப்பவர். “சூழலியல் மற்றும் பரிணாம உயிரியல்” துறையில். கலிஃபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றிருக்கும் இவர் இலங்கைத் தமிழர்.

இவர் பிரதான நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றும் அமைப்பு சூழற் பாதுகாப்புக்காகச் செயற்படும் முக்கியமானதோர் அமைப்பு. இவரது சூழலியல் பேணல் மற்றும் காலநிலைச் சீராக்குதற் பங்களிப்புகளுக்காக சர்வதேசப் புகழ் பெற்ற ‘டைம்’ (**Time**) சஞ்கை வருடா வருடம் தேர்ந்தெடுக்கும் 100 சிறந்த ஆளுமைகளில் ஒருவராக இவ்வாண்டு (2023) இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவ்விதம் தேர்ந்தெடுக்கப்படும் “டைம்” சஞ்சிகையின் பட்டியலில் இடம் பெறும் முதலாவது இலங்கையைர், இலங்கைத் தமிழர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் மகன் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது. தந்தை புனைவில் கவனம் செலுத்தினால் மகன் அபுனைவில் கவனம் செலுத்துகின்றார்.

-ஜெகதீசன்



# நல்லிணக்கத்தை சாத்தியமாக்குவதற்கான உணர்வுநிலை



**கலாநிதி ஜெகான் பெரேரா**



மேற்கு நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் இலங்கைக்கு வந்து கடந்த சில தினங்களாக பிரதானமாக மதத் தலைவர்களுடனும் அடுத்து அரசியல் மற்றும் சிவில் சமூகத் தலைலர்களுடனும் தங்களது நண்பர்கள், உறவினர்களுடனும் தொடர்ச்சியான பல சந்திப்புக்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த சந்திப்புக்களில் முக்கியமானது பௌத்த மதத் தலைவர்களுடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் அவர்கள் நடத்திய சந்திப்புக்களாகும். அவற்றுக்கு உயர்ந்தளவு சாதகமான வரவேற்பு கிடைத்தது.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் முன்னர் இலங்கைக்கு வந்திருந்தால் அவர்கள் விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டு சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டிருக்கக்கூடிய காலம் ஒன்று இருந்தது.

இந்த தடவை அவர்கள் உலக தமிழர் பேரவை என்ற அமைப்பின் பிரதிநிதிகளாக வந்திருக்கிறார்கள். இந்த பேரவை இலங்கையில் முதலில் 2014 ஆம் ஆண்டிலும் பிறகு 2021 ஆம் ஆண்டிலும் தடை செய்யப்பட்டிருந்தது. இரு தடவைகளிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பொறுப்பேற்று முடங்கிப்போய்க் கிடந்த சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்த வேளைகளிலேயே தடைகள் நீக்கப்பட்டன.

உலக தமிழர் பேரவையின் தூதுக்குழுவின் வருகையும் அதற்கு கிடைத்த பிரசித்தமும் மேற்கு நாடுகளில் உள்ள அவர்களின் சமூகத்தைச் சேர்ந்த சில குழுக்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

"புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளாகிய நாம், சிங்கள பௌத்த மதத்தலைவர்களில் ஒரு பிரிவினரும் தென்னிலங்கை சிவில் சமூகத்தவர்களும் முன்னெடுத்திருக்கும் ஒரு முயற்சி குறித்து ஊடக வட்டாரங்கள் மூலமாக அறிகின்றோம். இந்த குழுக்கள் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளில் தெரிந்தெடுத்த குறிப்பிட்ட சில பிரதிநிதிகளுடன் குறிப்பாக அந்த சமூகத்தின் ஒரு சில நபர்களை மாத்திரம் இப்போது பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உலக தமிழர் பேரவையுடன் நடத்துகின்ற பேச்சுவார்த்தைகள் எமது சமூகத்தை கூட்டாக பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களின் ஒருமித்த குரல்களை முழுமையாக பிரதிபலிப்பை அல்ல. உலக தமிழர் பேரவைக்கு முன்னர் இருந்த பிரதிநிதித்துவம் இப்போது இல்லை என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்" என்று அந்த குழுக்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றன.

உலக தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் இலங்கையில் சென்ற இடங்களில் எல்லாம் நல்ல வரவேற்பு இருந்ததாக அவர்களது விஜயத்தின் உள்நாட்டு ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். கண்டியில் அவர்கள் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பௌத்த உயர்பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்ததுடன் ஒரு காலத்தில் விடுதலை புலிகளின் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளான புனித தலதா மாளிகைக்கும் சென்று வழிபட்டார்கள்.

அடுத்த ஓரிரு தினங்களில் அவர்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் ஏனைய மதங்களின் தலைவர்களையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

சிவில் சமூகத்துடனான அவர்களின் சந்திப்புக்களில் பதற்றமோ, சந்தேகமோ அல்லது அவர்களை வெறுத்து ஒதுக்கும் உணர்வோ காணப்படவில்லை. நாம் எல்லோரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்று எமது தேசிய கீதம் கூறுவதைப் போன்றுஇது இவ்வாறு தான் அமையவேண்டும்.

## பொருத்தமான தருணம்

உறுதியானதும் நிலைபேறானதுமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் நல்லிணக்கச் செயன்முறை ஒன்றை முடுக்கிவிடுவதற்கு தற்போதைய தருணமே பொருத்தமானதாகும். மக்களை இடர்பாடுகளுக்கு உள்ளாக்கிய படுபோசமான பொருளாதார நெருக்கடி இன நெருக்கடி அல்ல நாட்டை பொருளாதார ஊழலில் இருந்தும் சூறையாடலில் இருந்தும் விடுவிப்பதே முன்னுரிமைக்குரியது என்று அவர்களை உணரவைத்திருக்கிறது.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை சேர்ந்தவர்களினால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல்கள் தற்போது நிரம்பி வழிகின்றன. தங்களது நண்பர்களையும் உறவினர்களையும் சந்திப்பதற்காக அவர்கள் பெரும் எண்ணிக்கையில் வந்திருக்கிறார்கள்.

உணவகங்களுக்கும் அவர்கள் படையெடுக்கிறார்கள். சாதாரண இலங்கை உழைப்பாளியினால் இந்த உணவகங்களுக்கு சென்று அங்குள்ள விலையுயர்ந்த உணவு வகைகளை சாப்பிடக் கட்டுப்படியாகாது. புலம்பெயர் சமூகத்தில் இருந்து வந்திருக்கும் தங்கள் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் இந்த உணவகங்களுக்கு வந்து அவர்களும் உணவுவகைகளை ருசிபார்க்கிறார்கள்.

உலக தமிழர் பேரவை ஒரு வருட காலமாக உயர்மட்ட பௌத்த மதகுருமாருடன் ஊடாட்டங்களை செய்துவந்திருப்பதே அவர்களுடைய இலங்கை விஜயத்தில் தற்போதுள்ள பிரத்தியேகமான அம்சமாகும்.

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்காக பிரசாரத்தை முன்னெடுத்த முக்கியமான புலம்பெயர் தமிழ்ச்சமூக அமைப்பாக உலக தமிழர் பேரவை இருக்கின்ற போதிலும், அதன் உறுப்பினர்கள் இரு பிரதான பௌத்த பீடங்களினதும் மகாநாயக்க தேரர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதுடன் தலதா மாளிகைக்கும் சென்றார்கள்.

பௌத்த மதகுருமாருடன் சேர்ந்து அவர்கள் விடுத்த அறிக்கையில் 'இலங்கையில் உள்ள பல்வேறு சமூகங்கள் மத்தியிலும் புரிந்துணர்வையும் அமைதி சமாதானத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் நாம் கடந்த சுமார் ஒரு வருடகாலமாக பேச்சுவார்த்தைகளை நடத்திவந்திருக்கிறோம். 2023 ஏப்ரலில் நேபாள நாட்டின் நாகார்கோட் நகரில் நடத்திய கட்டமைப்பு ரீதியான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் பரஸ்பரம் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கும் அதன் வழியாக இந்த தேசிய கலந்துரையாடலுக்கான கட்டமைப்பை உருலாக்குவதற்கும் வழிவகுத்தது. இலங்கை மற்றும் புலம்பெயர் சமூகங்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்ற இத்தகைய முதல் முயற்சியை தொடருவதற்கு வழிகாட்ட நாம் "இமாலய பிரகடனத்தை" செய்துகொண்டோம்" என்று கூறப்பட்டிருக்கிறது.

இது இரு தரப்புகளுக்கும் இடையிலான ஒரு இணக்கப்பாட்டை பிரதிபலிக்கும் ஒரு முக்கிய ஆவணமாகும்.

## ஆறு அம்ச கூட்டறிக்கை

உலக தமிழர் பேரவைக்கும் பௌத்த மதகுருமாருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை அடுத்து வெளியிடப்பட்டிருக்கும் கூட்டறிக்கை நன்கு தயாரிக்கப்பட்டிருக்கும் ஒரு ஆவணமாகும். நீதி மற்றும் நல்லிணக்கத்தின் ஊடாக இலங்கையை ஐக்கியப்பட்ட ஒரு கட்டத்துக்கு கொண்டுவருவதற்கு செய்யவேண்டியவற்றை பிரதிபலிப்பதாக அது அமைந்திருக்கிறது.

நேபாளத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற இடத்தை குறிக்குமுகமாக "இமாலயப் பிரகடனம்" என்ற மகுடத்தில் அமைந்திருக்கும் கூட்டறிக்கை கீழ்வரும் ஆறு அம்சங்களை வலியுறுத்துகிறது.

1) எந்தவொரு சமூகமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகவோ, அதன் அடையாளத்தையும் பெருமையையும் இழந்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சாத வகையில் நாட்டின் பன்முகத்தன்மையை பேணிக்காத்து மேம்படுத்துதல்.

2) பொருளாதார நெருக்கடியை வெற்றிகொண்டு வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களினதும் மற்றையவர்களினதும் ஈடுபாட்டுக்கும் முதலீடுகளுக்கும் வசதியாக அமையக்கூடியதாக உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்தும் உகந்த பொருளாதார வகைமாதிரியை தெரிவுசெய்வதுடன் இலங்கையை உறுதியான ஒரு மத்தியதர வருமானமுடைய நாடாக முன்னேற்றும் பாதையில் பயணம் செய்வதை உறுதிப்படுத்துதல்.

3) தனிப்பட்ட உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் உத்தரவாதம் செய்து சகல மக்கள் மத்தியிலும் சமத்துவத்தை மேம்படுத்தக்கூடியதும் நிறுவனங்களின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி மாகாணங்களுக்கு போதுமான அதிகாரங்களை உத்தரவாதம் செய்யக்கூடியதுமான புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைதல். அதுவரை அதிகாரப்பகிர்வு தொடர்பில் தற்போதைய அரசியரமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நம்பகமான முறையில் நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

4) ஐக்கியப்பட்டதும் பிளவுபடாததுமான நாட்டுக்குள் மக்களின் மத, கலாசார மற்றும் அடையாளங்களை ஏற்றுக்கொண்டு மதித்து அதிகாரங்களை பரவலாக்கி இனக்குழுக்களுக்கும் மதக்குழுக்களுக்கும் இடையில் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் உருவாக்குவதை நோக்கி பாடுபடுதல்.

5) மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை வளர்க்கக்கூடியதும் கடந்த கால அனுபவங்களில் இருந்து படிப்பினைகளை பெற்றுக்கொள்வதில் பற்றுறுதியுடன் கடந்த கால அவலங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்த பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகளைக் கொண்டதுமான இலங்கையை உருவாக்கும் நோக்குடன் செயற்படுதல்.

6) இரு தரப்பு மற்றும் பல்தரப்பு சர்வதேச உடன்படிக்கைகளின் கடப்பாடுகளை மதித்து சுதந்திரமானதும் உரமும் ஊக்கமும் நிறைந்த வெளியுறவுக் கொள்கையை பின்பற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து உலகில் சமாதானமும் வளமும் கொண்ட நாடுகள் மத்தியில் பெருமைக்குரிய ஒரு இடத்தை இலங்கை பிடிப்பதை உறுதிசெய்தல்.

உலக தமிழர் பேரவையுடனான பேச்சுவார்த்தைகளுக்கு தலைமைதாங்கிய பௌத்த மதகுருமாரில் வண. பேராசிரியர் பள்ளேகந்த ரத்னசார மற்றும் வண. மாதம்பகம அஸ்ஸஜி ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் கொவிட் பெருந்தொற்று காலத்தில் இறந்த முஸ்லிம்களின் பலவந்தமாக சடலங்களை தகனம் செய்வதற்கு பிறரது உணர்ச்சிகளை மதிக்காத முறையில் எந்தவிதமான விஞ்ஞான அடிப்படையற்ற தீர்மானத்தை அன்றைய அரசாங்கம் எடுத்தபோது இஸ்லாமிய மதத்தவர்களின் உரிமைகளுக்காக உறுதியாக குரல்கொடுத்தவர்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான வண. களுபஹன பியரத்ன தேரரும் இந்த பிக்குமார் குழுவில் அடங்குவார்.

உலகளாவிய 1000 சமாதானப் பெண்கள் என்ற குழுவின் ஒரு உறுப்பினராக 2005 நோபல் சமாதானப் பரிசுக்காக நியமிக்கப்பட்ட விசாகா தர்மதாச நேபாளப் பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணையாக செயற்பட்டார். அவரின் பங்களிப்பு புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்கள் குழுவுக்கும் பௌத்த மதத் தலைவர்களுக்கும் இடையில் புராந்துணர்வுடன் பொதுநிலைப்பாடு ஏற்படுவதற்கு பெரிதும் உதவியது.

## முரண்பாடான சான்றுகள்

உலக தமிழர் பேரவையின் தூதுக்குழுவின் விஜயத்தில் மிகவும் முக்கியமான நிகழ்வு என்றால் அது அவர்களும் பௌத்த மதத்தலைவர்களும் சேர்ந்து ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் நடத்திய சந்திப்பேயாகும். இதற்கு ஊடகங்கள் பெரும் முக்கியத்துவத்தை கொடுத்ததை காணக்கூடியதாக இருந்தது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்குமான அவர்களின் முயற்சிகளுக்கு தனது ஆதரவை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

(16ம் பக்கம் பார்க்க)

# பழுகாமத்தில் கலப்பின மிளகாய் அறுவடை விழா

காரைதீவு, டிசெ. 13

விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கலப்பின செத்தல் மிளகாய் செய்கையின் அறுவடை விழா பழுகாமம் விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்குட்பட்ட பொறுகாமம் கிராமத்தில் இடம்பெற்றது.

பழுகாமம் விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு பொறுப்பான விவசாய போதனாசிரியர் திருமதி துஷ்யந்தி ஜதீஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்பராஜா தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல், விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விவசாய பயிலுனர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

மிச் ஹைபிரிட் 1 எனும் மிளகாய் வர்க்கம் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இது இடம்பெற்றது.

சரிவான நிலங்களில் மண்ணரிப்பை தடுத்து மண்வளத்தை அதிகரிக்கும் நோக்குடன் சரிவுக்கு குறுக்காக அணைகள் அமைத்து அதன் மீது தேசிக்கன்றுகளை நடுவதற்கான தேசிக்கன்றுகளும் மட்டக்களப்பு மாவட்ட



விவசாய திணைக்களத்தால் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (அ)

# நல்லிணக்கத்தை சாத்தியமாக்குவதற்கான...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் இந்த உறுதிமொழி தங்களது பணிகளுக்கு நாட்டின் அதியுயர் அதிகார பீடத்தின் ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது என்பதால் உலக தமிழர் பேரவை பிரதிநிதிகளும் பௌத்த மதத் தலைவர்களும் மாத்திரமல்ல அவர்களைப் போன்று இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கும் நம்பிக்கையுடன் செயற்படுவதற்கு ஊக்கத்தை கொடுத்திருக்கும்.

ஆனால் இந்த முயற்சிகளுக்கு தோள்கொடுப்பதில் தங்களுக்கு இருக்கும் பொறுப்பை அரசியல் தலைவர்கள் தட்டிக்கழிக்கமுடியாது. மலை உச்சியை நோக்கி பாறாங்கல்லை நகர்த்துவதைப் போன்ற இந்த முயற்சிகளை மற்றவர்கள் செய்யட்டும் என்று அரசியல் தலைவர்கள் வாளாவிருக்கமுடியாது.

அரச அதிகார நிறுவனங்களை அமைப்பதற்கும் சட்டத்தில் உறைந்துகிடக்கும் நீதியை உறுதிசெய்வதற்கான வழிவகைகளை வகுப்பதற்கும் அரசியல் தலைமத்துவத்தை அரசாங்கம் கொடுக்கவேண்டியது அவசியமானதாகும்.

மட்டக்களப்பில் உள்ள விவசாயிகளும் கால்நடை வளர்ப்பாளர்ப்போரும் தங்களது மேய்ச்சல் தரையை சிங்கள குடியேற்றவாசிகள் சோளப் பயிர்ச்செய்கைக்காக அபகரித்துவருவதாக கடந்த மூன்று வருடங்களாக முறைப்பாடு செய்துவருகிறார்கள். இந்த மேய்சசல் தரை 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலமாக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

ஆனால் அந்த தரையில் 2020 ஆம் ஆண்டு முதல் பொலன்னறுவையை சேர்ந்த சிங்கள குடியேற்றவாசிகள் சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவருகிறார்கள். முரண்பாடான இந்த அனுமதிகள் பதற்றநிலையை தோற்றுவித்திருக்கின்றன.

இரு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்த பிறகு எண்பதுக்கும் அதிகமான கால்நடைகள் களவாடப்பட்டு, இறைச்சிக்காக கொல்லப்பட்டு அல்லது மின்சாரம் தாக்கி பலியாகயிருப்பதாக தமிழ் விவசாயிகளுக்காக தற்போது வாதாடும் சட்டத்தரணியான கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான பேராசிரியர் ரி.ஜெயசிங்கம் உறுதி செய்திருக்கிறார்.

விவசாயிகள் சுமார் 160 கால்நடைகளை இழந்திருப்பதாக கூறப்படுகிறது. மட்டக்களப்புக்கு ஜனாதிபதியின் வருகைக்கு முன்னதாக 2023 அக்டோபர் 7 ஆம் திகதியளவில் இரு பொலிஸ் காவல் நிலைகள் அமைக்கப்பட்ட பின்னரும் கூட இந்த நியாயமற்ற நிலைவரம் தொடருகிறது. அது மாத்திரமல்ல, செங்கலடியில் உள்ள இந்த மக்களுக்கு நீதி வழங்குவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க 2023 அக்டோபர் 8 ஆம் திகதி அறிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்தவர்களில் சிலரை (13 பேர் ) வெளியேற்றுமாறு 2013 நவம்பரில் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவோ அல்லது சகல ஆக்கிரமிப்பாளர்களையும் அப்புறப்படுத்துவதாக 2022 ஜூலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மகாவலி அதிகார சபையினால் வழங்கப்பட்ட உறுதிமொழியோ இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று பேராசிரியர் ஜெயசிங்கம் கூறியிருக்கிறார்.

“எதுவுமே உருப்படியாக நடைபெறவில்லை. இது ஆட்சிமுறையினதும் நிருவாகத்தினதும் அலட்சியத்தை அல்லது தகுதியீனத்தை அல்லது சிறுபான்மை இனத்தவர்களுக்கு நீதிவழங்குவதில் கடைப்பிடிக்கப்படும் அதன் கொள்கையையே வெளிக்காட்டுகிறது” என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் அதியுயர் அதிகாரமுடைய ஜனாதிபதியின் சொல்லுக்கு மதிப்பளித்து களத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால் மக்கள் பெரும்பாலும் ஆட்சிமுறைமையில் நம்பிக்கை இழந்துவிடுவார்கள்.

மேலும் நீதிமன்ற உத்தரவுகளும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு பொலிசார் நடவடிக்கை எடுக்காமல் இருக்கும்போது மக்கள் முற்றாகவே நம்பிக்கை இழந்துவிடுவார்கள். இத்தகைய சூழ்நிலைகளில் தான் வன்முறைகள் மூளகின்றன.

சொல்லுக்கு பிறகு செயல் வேண்டும். அல்லாவிட்டால் தற்போது உணரக்கூடியதாக இருக்கின்ற நல்லெண்ணம் மற்றும் நல்லிணக்க உணர்வுகள் சமூகத்தின் அடிமட்டத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கொண்டுவரப்போவதில்லை. 2011 அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் மேய்ச்சல் தரை குறித்து வர்த்தமானி மூலம் ஜனாதிபதி உத்தரவை பிறப்பித்தால் அது நல்லிணக்கத்துக்கான ஒரு தொடக்கமாக அமையலாம். ●

